# சித்திர ராமாயணம்

## பி. ஸ்ரீ.

### 141. 'முகூர்த்தம் நெருங்கி விட்டது'

மங்களகரமான வாத்திய கோஷங்கள் செவிகளை நிரப்புகின்றன. சந்திரோதயம் போல் முத்துக் குடைகள் ஜொலிக்க, இரு புறமும் வெண் சாமரை வீச, அரசர்கள் அந்தஸ்துக்கு ஏற்ற முறைப்படி பிரவேசிக்கிறார்கள். மற்ற ஜனங்களும் மிக்க மகிழ்ச்சியோடு மண்டபத்திலே வந்து கூடிய வண்ணமா யிருக்கிறார்கள்.

#### 'மாதவக் கிழவன் வந்தான்'

திடீரென்று வாசலில் ஒரு பெரிய ஆரவாரம்: 'விலகுங்கள், விலகுங்கள்' என்று ஜன சமுத்திரத்தைக் கடைந்து கொண்டு வருகிறது ஒரு குழாம். எல்லாரும் பளிச்சென்று விலகி வெகு மரியாதையாக வழி விடுகிறார்கள் ; வழிபடுகிறார்கள்.

ஆம் ; வேத கோஷம் முழங்க வருகிறாரே அந்த 'மாதவக் கிழவர்', அவர் ஸாக்ஷாத் வசிஷ்ட மகரிஷிதான்:

ஆயதோர் அமைதி யின்கண்,
    ஐயனை மகுடம் சூட்டற்(கு)
ஏயும்மங் கலங்கள் ஆன
    யாவையும் இயையக் கொண்டு,
தூயநான் மறைகள் வேத
    பாரகர் சொல்லத், தொல்லை
வாயில்கள் நெருக்கம் நீங்க,
    மாதவக் கிழவன் வந்தான்.

[ ஆயதோர் அமைதியின் கண் - நகரம் அந்த நிலையில் இருக்கும் பொழுது. ஐயனை - ராமனை. ஏயும் - பொருந்திய. மங்கலங்களான யாவையும் - மங்களப் பொருள்களை யெல்லாம். இயையக் கொண்டு - இசையச் சேர்த்துக் கொண்டு. தூய நான் மறைகள் - பரிசுத்தமான நாலு வேதங்கள். வேத பாரகர் - வேதத்தின் கரைகண்டவர்கள். தொல்லை வாயில்கள் - பழமையான ஆசார வாசல்களிலே. நெருக்கம் நீங்க - நெரு



ங்கி நின்ற ஜனங்கள் விலகி வழி விட, மாதவக் கிழவன் - மகத்தான தவத்திற்கு உரிமை வாய்ந்த வசிஷ்டர்.]

## முனிவர் ஆத்திரம்

மகரிஷி மண்டபத்துக்குள் வந்ததும் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய சாமக்கிரிகளை யெல்லாம் சித்தஞ் செய்து வைக்கிறார்:

கங்கையே முதல ஆகக்
கன்னியீ றான தீர்த்தம்
மங்கலப் புனலும், நாலு
வாரியின் நீரும் பூரித்(து)
அங்கியின் வினையிற்(கு) ஏற்ற
யாவையும் அமைத்து, வீரச்
சிங்கஆ தனமும் வைத்துச்,
செய்வன பிறவும் செய்தான்.

[கங்கையே முதல ஆக - கங்கா நதி முதலாக. கன்னி - கன்னியா குமரி. ஈறான - இறுதியாகவுடைய. தீர்த்தம் மங்கலப்புனல் - தீர்த்தங்களின் மங்களகரமான தண்ணீர். வாரி - கடல். பூரித்து (கும்பங்களில்) நிறைத்து வைத்து. அங்கி - அக்கினி. வினை - தொழில். (இங்கே) ஹோமம் முதலிய அக்கினி - காரியங்கள்.]

கங்கா தீர்த்தம் முதல் கன்னியாகுமரி தீர்த்தம் வரையுள்ள புண்ணிய தீர்த்தங்களை யெல்லாம் கும்பங்களில் நிறைத்து வைத்தார் வசிஷ்டர். ஹோமத்துக்கு வேண்டிய சமித்துக்கள் முதலியவற்றையும் தயாராக வைத்துக் கொண்டார். வீர ராமனை வீற்றிருக்கச் செய்து பட்டாபிஷேகம் செய்வதற்கு வீர சிம்மாஸனமும் தயாராக வைக்கப்பட்டிருந்தது. இன்னும் செய்யவேண்டிய காரியங்களையும் சர்வ ஜாக்கிரதையாகச் செய்து தம் அருமந்த சிஷ்யனான ராமனுக்கு முடிசூட்டிப் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தார் முனிவர் பெருமான்.

## சோதிடர்களின் ஆத்திரம்

'முகூர்த்தம் நெருங்கி விட்டது' என்று அவசரப்படுத்துகிறார்கள் சோதிட சாஸ்திரிகள். உடனே வசிஷ்டர், 'சக்ரவர்த்தி எங்கே? இன்னும் வரவில்லையே!' என்று நினைத்து, அருகே இருந்த சுமந்திரனை நோக்கி, "தசரத சக்ரவர்த்தியை உடனே அழைத்துக்கொண்டு வா" என்று சொல்லி அனுப்பினார். அவனும் அந்த ஆணையைத் தலைமேல்



கொண்டு, தன் ஆசையும் தூண்ட, அவசரமாய்ப் போகிறான்.

கணிதநூல் உணர்ந்த மாந்தர்,
''காலம்வந்(து) அடுத்த(து)''
என்னப்
பிணியற நோற்று நின்ற
பெரியவன், ''விரைவின் ஏகி
மணிமுடி வேந்தன் தன்னை
வல்லையில் கொணர்தி'' என்ன,
பணிதலை நின்ற காதல்
சுமந்திரன் பரிவில் சென்றான்.

[ கணித நூல் உணர்ந்த மாந்தர் - சோதிட நூலை அறிந்த சாஸ்திரிகள். காலம் - முகூர்த்த காலம். அடுத்தது - நெருங்கி விட்டது. என்ன - என்று தெரிவிக்க. பிணி அற நூற்று நின்ற - பிறவியால் வரும் துன்பங்களை யெல்லாம் உள்ளத்தை விட்டுப் போகும்படி நோன்பினால் நீக்கிச் சித்த சாந்தி பெற்றிருந்த. பெரியவன் - வசிஷ்டர். ஏகி - போய். மணிமுடி வேந்தன் - இரத்தின கிரீடத்தை உடைய தசரத சக்ரவர்த்தி. வல்லையில் - விரைவாக. கொணர்தி - அழைத்துக் கொண்டு வா. பணி—(வசிஷ்டருடைய) ஆணையை. தலை நின்ற—தலைமேல் கொண்டு செய்யத் தயாராக நின்ற. காதல் - சுமந்திரன்—(இங்கே) மிக்க ராஜபக்தியோடு கூடிய சுமந்திரன். பரிவில் - ஆசையோடு. ]

## சுமந்திரன் ஆத்திரம்

சுமந்திரன் தசாதருடைய அரண்மனைக்கு விரைந்து போனான். அங்கே சக்ரவர்த்தியைக் காணவில்லை. கைகேயியின் அரண்மனையில் அவர் இருப்பதாக அங்கே இருப்பவர்களிடம் விசாரித்துத் தெரிந்து கொண்டான். அப்படியே கைகேயி மாளிகைக்கு ஓடினான்.

அங்கே பணிப் பெண்கள் மூலமாகச் சக்ரவர்த்தியிடம், 'முகூர்த்தம் நெருங்கிவிட்டது ; தப்பிவிடக் கூடாதே!' என்று செய்தி தெரிவிக்கச் சொன்னான். அவர்களோ பளிச்சென்று கைகேயியிடம் ஓடிச் செய்தி சொல்கிறார்கள். அவளும் ஆத்திரமாகச் சுமந்திரனை நோக்கி, ''பிள்ளையை அழைத்துக்கொண்டு ஓடி வா'' என்று கட்டளை யிடுகிறாள்.

## கைகேயிக்கும் ஆத்திரம்தான்!

இவ்வளவு பரபரப்பையும் செய்யுளில் பார்க்கலாம் :—

விண்தொட நிவந்த கோயில்
வேந்தர்தம் வேந்தன் தன்னைக்
கண்டிலன், வினவக் கேட்டான்,
கைகயள் கோயில் நண்ணித்
தொண்டைவாய் மடந்தை மாரில்
சொல்ல,மற்(று) அவரும் சொல்லப்
பெண்டிரில் கூற்றம் அன்னாள்
''பிள்ளையைக் கொணர்க'' என்றாள்.

[விண் தொட நிவந்த கோயில்—ஆகாயத்தை அளாவி நின்ற அரண்மனையில். வேந்தர் தம் வேந்தன்—ராஜாதி ராஜனான சக்ரவர்த்தி. கண்டிலன்—காணாதவனாய். வினவ—(அங்கு உள்ளவர்களை) விசாரிக்க. கைகயி - கைகேயி. கோயில்—அரண்மனை. நண்ணி—அடைந்து. தொண்டைவாய் - தொண்டைக் கனி போலச் சிவந்த வாய். மடந்தைமார்—(இங்கே) பணிப் பெண்கள். பெண்டிரில கூற்றம் அன்னாள்—பெண்களுக்குள் யமன்போல் இருக்கிற கைகேயி. கொணர்க—அழைத்துக்கொண்டு வருக.]

## கைகேயிக்கும் முகூர்த்த அவசரம்தான்!

இந்தச் செய்யுளைப் பாடப் பாட, 'முகூர்த்தம் தப்பிவிடலாகாதே' என்ற சுமந்திரனுடைய ஆத்திரமும். 'நான் பெற்ற வரம் தப்பிவிடலாகாதே!' என்ற கைகேயி - ஆத்திரமும் அற்புதமாய்ப் புலனாகின்றன.

கைகேயியின் ஆத்திரத்திற்கு உண்மையான காரணம் இன்னதென்று இப்போது சுமந்திரனுக்குத் தெரியாது. அவளும் 'முகூர்த்தம் தப்பி விடலாகாதே; ராமன் தலையில் விரைவிலே மகுடம் ஏறிவிட வேணும்!' என்று நினைப்பதாகவே சுமந்திரன் நினைக்கிறான். இவன் உள்ளத்திலே பெருமகிழ்ச்சி பொங்குகிறது— 'சிறிய தாயானாலும் என்ன பேரன்பு!' என்று.

எவ்வளவு ஆத்திரமாக மாட வீதிகளைக் கடந்து போகிறான்! உவகை வெள்ளத்திலே மிதந்து போகிறான் என்றே சொல்லலாம்.

என்றனள், என்னக் கேட்டான்,
எழுந்தபே ருவகை பொங்க,
பொன்திணி மாட வீதி
பொருக்கென நீங்கிப் புக்கான்.

[பொன்திணி—தங்க ரேக்குகள் வைத்து அலங்கரித்த.]

எல்லாம் 'முகூர்த்தம் தப்பிவிடுமே!' என்ற பரபரப்பும் ஆத்திரமுந் தான். அந்த முகூர்த்தத்திலேயே காட்டுக்குத் துரத்த வேண்டுமென்று கைகேயி அம்மாளுக்கும் ஆத்திரம்தானே!

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 142. நம் உயிரல்லவா முடி சூடப் போகிறது?

சுமந்திரன் வந்து பார்க்கும்போது ராமன் தியானத்தில் இருந்தான். பொதுவாக, தியானம் என்றால் விசேஷமாக உள்ளத்துள்ளே உத்தமனைத் தியானிப்பது ; உள்ளத்துள்ளே உள்ள இறைவனையே நினைத்து 'எல்லாம் அவனுடைய லீலை' என்ற ரீதியில் சிந்தனையைச் செலுத்திக்கொண்டிருப்பது. பட்டாபிஷேகச் செய்தியை நேரில் ராமனிடம் வசிஷ்டர் போய் தெரிவித்து அவனை உபவாசமிருந்து, பகவானைத் தியானிக்கும்படி சொல்லியிருந்தார் என்பதை நாம் இப்போது ஞாபகப் படுத்திக்கொள்ளவேண்டும்.

### தன்னையே நினைக்கும் தியானம்

கவிஞன் தியானத்திலிருக்கும் ராமனையும், அவன் முன் போய் நிற்கும் சுமந்திரனையும் சுட்டிக் காட்டுகிறான், அகமும் புறமும் ஒருங்கே தெரியும்படி :

தன்திரு வுள்ளத் துள்ளே
தன்னையே நினையும் மற்(று)அக்
குன்(று)இவர் தோளி னானைத்,
தொழுதுவாய் புதைத்துக் கூறும்.

[திருவுள்ளம்—அழகிய மனம். மற்று-அசை; செய்யுளின் இசையை நிறைக்க வந்தது. குன்று இவர் — குன்றை ஒத்த. வாய் புதைத்து — வாய்பொத்தி. கூறும்—சொல்லலானான்.]

ஞானிகள் தங்கள் திருவுள்ளத்துள் கடவுளையே நினைத்துக் கொண்டிருக்க, ராமன் தன் திருவுள்ளத்துள் தன்னையே நினைத்துத் தியானம் செய்துகொண்டிருக்கிறானாம். என்ன தியானம் இது? எல்லா உள்ளங்களிலும் கடவுள் இருந்த போதிலும், ராமனைக் கடவுளின் மானிட வேஷம் என்கிறது இந்த இதிகாசம். ஆகவே 'தன் திருவுள்ளத்துள்ளே தன்னையே நினை'த்துக் கொண்டிருக்கிறானாம். முடி சூட்டிக் கொள்வதை முன்னிட்டுக் கடவுளைத் தியானிக்கத் தொடங்கியதும், தான் மானுடச் சட்டை போர்த்து வந்த காரணமும், இந்த அவதாரத்தில் செய்யவேண்டிய பெருங் காரியமும் அகக் கண்ணுக்கு இலக்காக, அந்த நிலையில் அப்படியே

லயித்துத் தன்னையே நினைத்துக் கொண்டிருந்தான் என்பது குறிப்பு.



## கைகேயி அழைக்கிறாளாம் முடி சூட!

இத்தகைய தியானத்திலிருக்கும் ராமனைச் சுமந்திரன் தொழுது மரியாதையாக வாய் பொத்திக்கொண்டு நின்றான்; பின்பு விரைவாகவே தியானம் கலையும்படியாகப் பேசலானான்: "அப்பா, ராமசந்திரா! அரசர்கள் முனிவர்கள் எல்லோரும் ஒரே ஆசையாக உன் வரவை எதிர்நோக்கி யிருக்கிறார்கள்; உன் தந்தை போல அவ்வளவு பேரன்புடன் காத்திருக்கிறார்கள். அது மட்டுமா? உன் சிறிய தாயாருடைய பேரபிமானத்தையும் ஆத்திரத்தையும் தான் என்னென்பது?''

இப்படிப் பேசும் சுமந்திரனுடைய வார்த்தைகள் எப்படிப்பட்ட களங்கமற்ற உள்ளத்திலிருந்து பொங்கி வருகின்றன பாருங்கள்:

'கொற்றவர், முனிவர், மற்றும்
குவலயத்(து) உள்ளார், உன்னைப்
பெற்றவன் தன்னைப் போலப்
பெரும்பரி(வு) இயற்றிநின்றார்;
சிற்றவை தானும் ஆங்கே
கொணர்கெனச் செப்பினாள்;அப்
பொற்றட மகுடம் சூடப்
போதுதி விரைவின்!' என்றான்.

[ கொற்றவர் - அரசர். மற்றும் - பின்னும். குவலயத்துள்ளார் - உலகத்திலுள்ளவர்கள். பெரும்பரிவு - பேரன்பு. இயற்றி - செய்து. சிற்றவை - சிறிய தாயார். கொணர்கென - அழைத்து வருவாய் என்று.]

## அவனுள்ளம் நிறைவேறுவதாக!

முடிசூட்டுவதற்காகவே கைகேயி வரவழைக்கிறாள் என்ற நினைப்புடன் சுமந்திரன் அழைத்ததும் ராமன் தன் உள்ளத்துள் வீற்றிருக்கும் ஆயிரம் முடிகளோடு கூடிய ராஜாதிராஜனை; தேவாதிதேவனைக் கை தொழுது தேரிலேறிப் புறப்படுகிறான். 'அந்தப் பெருமானுடைய திருவுள்ளம் நிறைவேறுவதாக!' என்று கைதொழுததாய்க் கருதலாம். அது தானே ராமன் திருவுள்ளமும்?

ஐயனும் அச்சொல் கேளா,
ஆயிரம் மௌலி யானைக்
கைதொழு(து), அரச வெள்ளம்
கடல்எனத் தொடர்ந்து சுற்றத்,
தெய்வகீ தங்கள் பாடத்,
தேவரும் மகிழ்ந்து வாழ்த்தத்,
தையலார் இரைத்து நோக்கத்,
தார்அணி தேரில் சென்றான்.



[ஐயனும்- அழகனாகிய ராமனும். கேளா - கேட்டு. மௌலி-முடி, கிரீடம். ஆயிரம் மௌலியான் - 'ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:' அதாவது, ஆயிரம் முடிகளோடு கூடிய புருஷோத்தமன் என்று வேதம் சொல்லுகிற பரம்பொருள். ஆயிரம் (இங்கே) அனந்தம். அதாவது, முடிவில்லாத எண். அரசவெள்ளம்-அரசர் கூட்டம். தெய்வகீதங்கள்- தேவகானம் என்று சொல்லத்தக்க இனிய கீதங்கள். தையலார்- பெண்கள். இரைத்து - இரைந்துகொண்டு; சந்தோஷ ஆரவாரம் செய்துகொண்டு. தார்அணி - மாலைகளை அழகாய்த் தொங்கவிட்ட.]

சர்வலோக ஆட்சிக்கு அறிகுறியான ஆயிரம் மௌலி அரும் பரஞ்சுடரை உள்ளத்துள்ளே கண்டு, சுமந்திரன் சொற்கேட்டு அந்தத் தியானம் கலைய, 'அப்பெருமானின் அவதார ஸங்கல்பம் இனிது நிறைவெய்துவதாக' என்று பிரார்த்தனை செய்துகொண்டது போல் கை தொழுது ராமன் தேரில் ஏறிக் கொண்டதும், அரச வெள்ளம் கடல் போலத் தொடர்ந்து வந்து தேரைச் சுற்றிக்கொண்டு போகிறதாம். சுமந்திரன் சொன்னதுபோல் அங்கே காத்துக்கொண்டு நின்ற அரசர் பலரும் ஆத்திரத்துடன் சுமந்திரனைப் பின் தொடர்ந்து இங்கே ராமன் மாளிகை வாசலுக்கே வந்துவிட்டார்கள் என்பது குறிப்பு.

## ஏக உத்ஸாகம்: ஏக உயிர்!

சிலருக்கு உத்ஸாகம் கீத ரூபமாக வெளிப்படுகிறது; இப்போது உத்ஸாகம் தெய்விக உத்ஸாகமாய்ப் பொங்கி விட்டதால் கீதங்களும் தெய்வ கீதங்களாக உயர்ந்து விட்டன, — தேவர்களே வந்து பாடுகிறார்களோ என்று அதிசயிக்கும்படி. ஆம், தேவர்களுடைய மகிழ்ச்சியும் வாழ்த்தொலியும் கூட வந்து கலந்து விடுகின்றனவாம் இசையோடு இசையாக. இந்நிலையில் பெண்மணிகளும் தோழிகளோடு கோலாகலமாய்ப் பேசிக்கொண்டு வருகிறார்கள். மகிழ்ச்சியை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு வருகிறார்கள். இந்தப் பேரிரைச்சல்களும் தெய்வ கீதங்களோடு இசைந்து ஏதோ ஒரு தெய்வப் பேரிசையாகப் பூரித்து விடுகின்றன.

மாலைகள் 'ஜில் ஜில்' என்று ஆடத் தேர் போய்க்கொண்டிருக்கிறது. வழியெல்லாம் பெண்கள் 'ஜல் ஜல்' என்று வந்து குவிந்த வண்ணமாயிருக்கிறார்கள். ஆடவர்களும் வந்து குவிகிறார்கள்.

'திருமணி மகுடம் சூடச்
சேவகன் செல்கின் றான்'என்(று)
ஒருவரின் ஒருவர் முந்திக்,
காதலோ(டு) உவகை உந்த,
இருகையும் இரைத்து மொய்த்தார்,—
இன்னுயிர் யார்க்கும் ஒன்றாய்ப்
பொருவருந் தேரில் செல்லப்
புறத்திடைக் கண்டார் போல்வார்.

[திருமணி மகுடம் - அழகிய ரத்தின கிரீடம். சேவகன் - வீரன். உவகை - மகிழ்ச்சி. உந்த - தூண்டித்தள்ள. இருகையும் - இரண்டு பக்கத்திலும். பொருவரு-ஒப்பற்ற (அழகு வாய்ந்த) புறத்திடை-வெளியில்.]

## புதுமையன்று, பொதுமைதான்!

ராமன் தேரில் செல்லும் போது இரண்டு பக்கத்திலும் வந்து மொய்த்துக் கொள்ளும் ஜனங்கள் ஏக ஆரவாரஞ் செய்கிறார்கள். அவர்களுடைய மகிழ்ச்சியையும் ஆசையையும் என்னென்பது? காதலும் உவகையும் பிடர் பிடித்துத் தள்ள 'நான் முன்னே, நீ முன்னே' என்று போட்டி போட்டுக்கொண்டு ஓட்டமாக வந்தவர்களல்லவா? முடி சூடிப் போகும் வைபவத்தைப் பார்க்கவே இவ்வளவு குதூகலம் என்றால், முடிசூடும் வைபவத்தையே பார்க்க நேர்ந்தால் எப்படித்தான் அனுபவிப்பார்களோ?

அந்த வசீகரமான முகமண்டலத்தைக் கண்ட அவர்களுக்கு, உயிரானது எல்லாருக்கும் பொதுவாக ஒன்றுதான் என்று உணரும்படி திரண்டு வெளியே இருப்பது போலத் தோன்றுகிறது. அந்தப் பொதுவான ஒரே இன்னுயிரை—இது மாயமா, மந்திரமா?—தங்கள் உடல்களுக்கு வெளியே அவர்கள் ஸ்தூல ரூபத்தில் பார்க்கிறார்கள். அந்த உயிர் ஒப்பில்லாத அழகு வாய்ந்த ரூப சித்திரமாகிய ராம வடிவம்பூண்டு, ஒப்பில்லாத அழகுவாய்ந்த தேரில் முடி சூடப் போகிறது! அந்த அழகிலே அவ்வளவு ஈடுபாடு, வைத்தியம்! எல்லாருக்கும் பொதுவான ஓர் உயிர் முடிசூடி அரசு புரிவதென்றால், பொதுமக்களுடைய ஆசைக்கும் உவகைக்கும் எல்லையுண்டோ? ராமனுடைய உயிரும் ரூப சம்பத்தும் பொதுவுடைமை; இவனுடைய ராஜ்ய சம்பத்தும் பொதுவுடைமைதானும்!

'நாம் எல்லாரும் இந் நாட்டு மன்னர்!' என்று குதூகலப்பட்டார், குதூகலப் படுத்துகிறார் பாரதியார். இப்புதுமைக் கவியின் குதூகலம் கம்பனுடைய அயோத்திக்குப் புதுமை யன்று, பொதுமைதான் என்று சொல்ல வேண்டும்.

# சித்திர ராமாயணம்

### பி. ஸ்ரீ.

## 143. கொள்ளை கொண்ட உத்தமன்

பெண்களுடைய ராமபக்தி ராமனை எல்லோருக்கும் பொதுவான ஒரே இன்னுயிராகக் கண்டதோடு, அந்த இன்னுயிரை எத்தனையோ ராமர்களாகவும் காண்கிறது. அவர்கள் ராமனை ஓரிடத்தில் மட்டுமா பார்க்கிறார்கள்? எங்கும் பார்க்கிறார்கள்; பார்க்குமிடம் எங்கும் பார்க்கிறார்கள்.

சிரித்த செந்தாமரைக் கண்களும், அழகு சுமந்த நீலமேனியும் தேருமாக எத்தனை எத்தனை ரூப சித்திரங்கள்!

'செங்கணும் கரிய கோல
மேனியும் தேரும் ஆகி,
எங்கணும் தோன்று கின்றார்,
எனைவரோ இராமன்?' என்பார்.

[கோல மேனி—அழகிய மேனி. எங்கணும்—எல்லா இடங்களிலும். எனைவரோ—எத்தனை பேரோ.]

### காதல் – வேதாந்தம்

எல்லா உயிர்களையும் ஒன்றாகக் கண்டவர்கள், ராமனைப் பலராகக் காண்கிறார்கள். 'பன்மையில் ஒருமை, ஒருமையில் பன்மை' காணும் வேதாந்திகளாகி விட்டார்கள் ராமன் - காதலர்கள்! 'ராமன் ஒருவன் அல்லன்; ராமன் எத்தனை பேரோ?' என்று பிரமித்துப் போகிறார்கள்.

இத்தகைய பெண்கள்-கூட்டம் இரு பக்கமும் மொய்த்திருக்க, ராமன் நடுவே போய்க் கொண்டிருக்கும் காட்சியுடன், பின்னால் இவன் காட்டுக்கு நடுவே போகும் காட்சியையும் ஞாபகப்படுத்திப் பார்க்கிறான் கவிஞன். கைகேயி சொல்லால் முடி துறந்து, மூங்கில்களும் கருவேல மரங்களும் மண்டிக் கிடக்கும் பெருங்காட்டிலே பிரவேசிக்கப் போகிறானல்லவா? இப்போதே அத்தகைய நெடுங்கானம் ஒன்றில் பிரவேசித்து விட்டதாகக் கவிஞன் கற்பனை செய்கிறான்.

## அந்தக் காடும் இந்தக் காடும்

ஆம், அதே மூங்கில் காடுதான்; அவ்வளவு கொடுமையான கருவேலங்காட்டுக்கிடையேதான் இதோ பிரவேசிக்கிறன்:

துண்ணெனும் சொல்லாள் சொல்லச்,
சுடர்முடி துறந்து, தூய
மண்ணெனும் திருவை நீங்கி
வழிக்கொளா முன்னம் வள்ளல்,
பண்ணெனும் சொல்லி னார்தம்
தோளெனும் பணைத்த வேயும்,
கண்ணெனும் கால வேலும்
மிடைநெடுங் கானம் புக்கான்!

[துண் எனும் சொல்லாள்—அஞ்சத்தக்க சொல்லையுடைய கைகேயி. சுடர்முடி—பொன்னும் இரத்தினமும் சுடர் வீசும் கிரீடம். தூய மண் எனும் திரு—தூய்மையுடைய பூமி என்ற செல்வம். வழிக் கொளா முன்னம்—பயணப்படுவதற்கு முன்னமே. பண் எனும் சொல்லினர்—'இவர்கள் பேச்சே இசைப்பாட்டு என்று சொல்லும்படி இருக்கிறது!' என்று வியக்கத்தக்க குரலினிமையும் பேச்சினிமையும் வாய்ந்த பெண்கள். பணைத்த வேய்—பருத்த மூங்கில்கள். கண் எனும் காலவேல்—கண்களாகிய கொடிய யமனைப் போன்ற வேல்கள். மிடை—(இருபுறமும்) நெருங்கிய. நெடுங்கானம்—பெருங்காடு. புக்கான்—போனன்; பிரவேசித்தான்.]



கைகேயி சொல்லால் கானகம் செல்வதற்கு முன்னமே ராமன் மூங்கிலும் வேலும் நெருங்கிய கானகம் செல்லுகிறனும்: பெண்களது தோள்களாகிய மூங்கில்களும், அவர்களுடைய கண்களாகிய வேல்களும் இருபுறமும் நெருங்கி யிருக்க, அந்த நெடுங்கானகத்தினிடையே போகிறனும். 'கண் எனும் கால வேல்' என்பதில் வேல், வேலாயுதம்தான். சிலேடையால் வேல் கருவேல மரத்தையும் குறிக்கும். அந்தக் காட்டிலே கருவேல மரங்கள் மண்டித் துயர் கொடுக்குமென்றால், இந்தக் காட்டிலே உயிரைப் பருகும் வேலாயுதங்கள் அங்கு மிங்கும் பாய்ந்து கொண்டிருக்கின்றனவாம்.

இப் பாட்டில் ராமனை 'வள்ளல்' என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. கைகேயிக்கும் பரதனுக்கும் நாடு என்ற செல்வத்தை வழங்கப்போகும் வள்ளல் இப்போது தன் ரூப சம்பத்தாகிய, காட்சிப் பேரின்பத்தை இப் பெண்களுக்கு வழங்குகிறன் என்பது குறிப்பு.

## ஆசையும் ஆசியும்

பொதுவாகச் சொல்லுமிடத்து, ஆண்களாயினும் பெண்களாயினும், முதியராயினும் இளைஞராயினும், துறவிகளாயினும் இல்லறத்தாராயினும் ராமனது மேனியைக் கண்டவர்கள் தங்கள் அன்பிற்கு எல்லை காணாமல் போகிறார்கள் :

அனையவன் மேனி கண்டார்,
அன்பினுக்(கு) எல்லை காணார்.

[ அனையவன் — அந்த ராமனது.]

இத்தகைய எல்லை காணாத ஆசையிலே ஆசிகளும் எல்லை காணாமல் செல்லுகின்றன !

'உய்ந்த(து) இவ் உலகம்' என்பார் ;
'ஊழிகாண் கிற்பாய்!' என்பார் ;
'மைந்த! நீ கோடி எங்கள்
வாழ்க்கைநாள் யாவும்!' என்பார் ;
'ஐந்தவித்(து) அரிதிற் செய்த
தவம்உனக்(கு) ஆக' என்பார் ;
'பைந்துழாய்த் தெரிய லாய்க்கே
நல்வினை பயக்க!' என்பார்.

[உய்ந்தது — மேலான நிலையை அடையப் போகிறது. ஊழிகாண் கிற்பாய்—நீடூழி வாழ்வாயாக. காண்கிற்பாய்—பார்ப்பாயாக. மைந்த—மைந்தனே. கோடி—கொள்ளுதி ; ஏற்றுக்கொள்வாயாக. ஐந்தவித்து—ஐந்து அவித்து ; ஐம்புலன்களை அடக்கி. அரிதிற் செய்த — (முனிவர்கள்) அருமையாகச் செய்த. பைந்துழாய்த் தெரியலாய்க்கே — பசுமையான துளசி மாலை அணிந்த உனக்கே. பயக்க — பயன் தருவதாக.]

ராமனைப் பார்த்து, 'இவனல்லவா முடி சூடப் போகிறான்?' என்று நினைத்துப் பார்த்ததும், 'இந்த ராஜ்யம் இனி நிச்சயமாக எவ்வளவோ உயர்ந்து போகும், உய்ந்து போகும்' என்று தோன்றுகிறதாம். 'இத்தகைய அரசன் நீடூழி வாழ வேண்டும் ; யுக முடிவு வரையிலும் இவன் ஒருவனே ஆட்சி செலுத்தினால் போதுமே !' என்றெல்லாம் சொல்லத் தோன்றுகிறது. 'முனிவர்கள் செய்த தவமெல்லாம் உனக்காகத்தான் ; தேசசேவைக்கு உன்னைப்போன்ற ஒரு காவலனைத் தோற்றுவிக்கத்தான்!' என்று நாவும் உள்ளமும் குளிர்ந்து ஒன்று பட்டு ஆசி பேசுகின்றன,

துளசி மாலை அணிந்து இவன் போவதைப் பார்த்ததும், 'மானுடச் சட்டையில் போகும் ஸாக்ஷாத் மகாவிஷ்ணுதான்' என்றே தோன்றுகிறதாம். எனினும் இந்த மனிதக் கடவுளுக்கும், ஹிருதயம் ஆசையால் ஆசி சொல்லுகிறது,—'நல்ல காரியங்களெல்லாம் உண்டாக வேண்டும், பயனளிக்க வேண்டும்' என்று.

## எல்லாருக்கும் ஏக புத்திரன் !

இந்த நிலையில், அவர்கள் தங்கள் ஆயுளையும் கூட ராமனுக்கு அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருக்கிறார்கள், இவன் நீண்ட காலம் வாழும்

பொருட்டு. ஒரு மொகல் மன்னன் தன்னுடைய அருமை-மகன் அபாய கரமான நோயினின்றும் பிழைத்து எழுந்து உயிர் வாழ்வதற்காகத் தன்னுடைய ஆயுளைக் கொடுத்துத் தான் உயிர் துறந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா? அதே மன நிலையுடன் அயோத்தி வாசிகளும் ராமனை நோக்கி,

'மைந்தநீ கோடி எங்கள்
வாழ்க்கைநாள் யாவும்!'
என்பார்.

பாபர் என்ற மொகல் மன்னன் சக்ரவர்த்தியாக இருந்தும், தன்னுடைய ஏக புத்திரனுக்காகத்தான் ஒருவனே உயிரைக் கொடுக்கத் துணிந்தானும். கம்பனுடைய அயோத்தியிலோ மக்கள் யாவரும் ஒரு முகமாக, ஒரே மனமாக, ராமனைத் தங்கள் ஏக புத்திரனாகவே பாவித்து, 'மகனே! எங்களுடைய ஆயுள் முழுவதையும் கூட்டினால் எவ்வளவு வருமோ அவ்வளவு காலம் நீ உயிர் வாழ்வாயாக!' என்று ஆசி கூறுகிறார்கள்.

## அருளுக்கும் அன்பிற்கும் அடிமை!

அந்த முகமும் அந்தக் கண்களும் அவர்களை அப்படியெல்லாம் நினைக்கச் செய்து விடுகின்றன. அந்தக் கண்களில் மிதக்கும் அருளுக்கு அடிமையாகி விட்டார்கள். அக் கண்களைத் தாமரைக் கண்கள் என்றும், அவனைச் செந்தாமரைக் கண்ணன் என்றும் சொல்கிறார்களல்லவா? 'இக் கண்களை ஒத்திருக்கச் செந்தாமரைதான் என்ன தவம் செய்ததோ?' என்கிறார்கள். 'மேனியை ஒத்திருக்க நீலமேகம் என்ன புண்ணியம் செய்ததோ?' என்றும் வியக்கிறார்கள். ராமனுடைய அருளுக்கும் அன்பிற்கும் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்தவர்களல்லவா!

# சித்திர ராமாயணம்

## பி. ஸ்ரீ.

### 144. ரதம் ஓடுகிறது; கவிதாரஸமும் அப்படியே!

தன்னை அன்போடு நோக்கியவர்களை ராமன் அருளோடு நோக்கிக் கொண்டே போகிறான். 'இவ்வளவு உயர்ந்த அருள்-ஒளி வீசும் கண்களைத் தாமரைக் கண்கள் என்கிறார்களே; இத்தகைய வள்ளலின் மேனியை நீலமேகம் போன்றது என்கிறோமே: இம்மேனிக்கும் கண்களுக்கும் உபமானம் ஆவதற்குத்தான் மேகமும் தாமரையும் என்ன தவஞ் செய்தனவோ?' என்று அதிசயித்தவர்கள், 'இந்த ராமனை நமக்கு அளித்திருக்கும் தசரத சக்ரவர்த்தி செய்த தவம் தான் எவ்வளவு அருமையானது!' என்கிறார்கள்.

#### என்ன அருள்! என்ன அழகு!

இவ்வளவு அன்பையும் அருமையையும், அந்த மக்களின் மன நிலையையும் எவ்வளவு தெளிவாய்ப் பார்க்கிறோம் பின் வரும் செய்யுள் வாயிலாக :—

'உயர்அருள் ஒண்கண் ஒக்கும்
  தாமரை, நிறத்தை ஒக்கும்
புயல்பொழி மேகம்; என்ன
  புண்ணியம் செய்த?' என்பார்;
'செயலருந் தவங்கள் செய்(து)இச்
  செம்மலைத் தந்த செல்வத்
தயரதற்(கு) என்ன கைம்மா(று)
  உடையம்யாம், தக்க(து)?' என்பார்.

[உயர் அருள் —(எங்கும் காணப் பெறாத) உயர்ந்த அருள். ஒண் கண்—ஒளி வீசும் கண்கள். புயல்பொழி மேகம்—மழை பொழியும் கரு



நீல மேகம். செய்த—செய்தன. செயல் அருந் தவம்—பிறரால் செய்தற்கு அரிய தவம். செம்மல்—ராமன். கைம்மாறு—பிரதி உபகாரம். உடையம்—உடையவர்களா யிருக்கிறோம்.]

## கருணையும் கண்ணீரும்

ராமனுடைய முகத்திலும் கண்களிலும் ஒளிவீசிய கருணை சாமானியமாகத் தோன்றவில்லை, தெய்விகமாகவே தோன்றுகிறது, அப்போது பார்த்து நின்ற அயோத்தி வாசிகளுக்கெல்லாம். அந்தக் கருணையிலே ஈடு பட்டுப் பின் வருமாறு பேசிக்கொள்கிறார்கள் :

'வாரணம் அரற்ற வந்து
கராஉயிர் மாற்றும் நேமி,
நாரணன் ஒக்கும் இந்த
நம்பிதன் கருணை!' என்பார்,
ஆரணம் அறிதல் தேற்றா
ஐயனை அணுகி நோக்கிக்
காரணம் இன்றி யேயும்
கண்கள்நீர் கலுழ நிற்பார்!

[வாரணம்–கஜேந்திரனாகிய யானை. அரற்ற–ஓலமிட. கரா—முதலை. மாற்றும்—உயிரை வாங்கின. நேமி—சக்ராயுதம். நம்பி—புருஷோத்தமனாகிய ராமன். ஆரணம்—வேதம். அறிதல் தேற்றா—அறியக் கூடாத. ஐயனை—ராமனை. அணுகி—நெருங்கி. காரணம் இன்றியேயும் — காரணம் இல்லாமலும். கலுழ—சிந்த.]

ராமனைக் கண்ட மாத்திரத்தில், அந்தத் தெய்விகக் கருணையில் ஈடுபட்டதும், அவனை நெருங்கி நோக்கி ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்களாம். 'இந்த நம்பியின் கருணை, கஜேந்திரன் என்ற யானை ஓலமிட்டதும் அந்த அரற்றலை 'ஆதிமூலமே' என்று தன்னை அழைத்ததாகக் கொண்டு அருள் புரிந்த அந்த நம்பியின் கருணையை ஒத்திருக்கிறது!' என்று தமக்குள் தாமே சொல்லிக் கொள்கிறார்களாம்.

இவர்களுக்கெல்லாம் ராமனை அணுகி நோக்க எவ்வளவு ஆசை! அணுகி நோக்கியதும் என்ன ஆனந்தக் கண்ணீர்! உயிரும் உடலும் அப்படி உருகுகின்றன ஈடுபாட்டினால். கண்ணீர் தானாகச் சிந்துகிறது. இதற்கெல்லாம் தக்க காரணம் என்னதான் சொல்ல முடியும் தர்க்க ரீதியாக?

இனி, முடிசூட்டப்போகும் ராமனைப் பார்த்ததும், காரணமில்லாமலே கண்ணீர் வருகிறது என்பதில் பின்னே வரும் சோகவெள்ளத்திற்கு ஒரு சூசகத்தையும் காணலாம் என்பர். 'என்ன கருணை! முடிசூடி நம்மை ஆட்கொள்ளப் போகிறான்!' என்று உருகிக் கண்ணீர் வடிக்கிறவர்கள், 'இந்தக் கருணை, அந்த முடியையும் துறந்து காடு சென்று உலகத்திற்கே உதவப் போகிறது!' என்பதை எப்படி அறிவார்கள்?

## முன்னோர் பெருமையும், ராமன் பெருமையும்

ராமன் தேர் போய்க்கொண்டிருக்கிறது. வேறொரு இடத்தில் வேறு சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ராமனுடைய முன்னோர்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். 'ஏதோ பூர்வ காலத்திலே சமுத்திரம் என்ற சாகரத்தையே தோண்டி வைத்தார்களாம் சகரர்கள் என்ற முன்னோர்கள். அந்தப் பரம்பரையில் வந்த ராமன் எத்தகைய செயற்கருஞ் செயல் செய்யப்போகிறானோ?' என்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

'பகீரதப் பிரயத்தனம்' என்று சொல்லுகிறோமே, அத்தகைய பெரு முயற்சியால் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்த பகீரதனைக் குறித்துப் பிரஸ்தாபித்தனர் சிலர். இன்னுஞ் சிலர், முசுகுந்தன் முதலான வீரர்கள் தேவாசுர யுத்தத்திலேயே தேவநேசர்களாகித் துஷ்ட அசுரர்களோடு போர்த் தொடுத்து வெற்றி பூண்டதைப் பிரஸ்தாபித்தார்கள். 'ஆனால் இந்த முன்னோர்களை வைத்தா ராமனுக்குப் புகழ்?' என்று ஆலோசிக்கிறார்களாம் இப்போது ராமனைக் கண்டதும்.

அந்தப் பழஞ் செயல்களைப்பற்றி இப்போது ஞாபகம் வருவதே ராமனைக் குறித்துப் பேச நேர்ந்ததால் தானே? அந்தப் பழங்கதைகளெல்லாம் ராமனுடைய புகழைத் தழுவித்தான் இனி நிலை நிற்க வேண்டுமென்கிறார்கள். ரகுவீரனாகிய ராமனுக்காகத் தானே ரகுவம்ச சரித்திர மெல்லாம் ஞாபகத்திற்கு வருகிறது:

'ஆர்கலி அகழ்ந்தோர், கங்கை
அவனியில் கொணர்ந்தோர், முந்தைப்
போர்கெழு புலவர்க்(கு) ஆகி
அசுரரைப் பொருது வென்றோர்,
பேர்கெழு சிறப்பின் வந்த
பெரும்புகழ் நிற்ப(து), ஐயன்
தார்கெழு திரள் தோள்தந்த
புகழினைத் தழுவி!' என்பார்.



[ஆர்கலி — சமுத்திரம், அகழ்ந்தோர் — தோண்டியவர். அவனியில்—பூமியில். முந்தை—பழமையான. போர்கெழு—போரில் விளங்கின. புலவர் — தேவர். பொருது—போர் செய்து. பேர் கெழு—பெயர் விளங்குகிற. தார் கெழு—மாலை விளங்குகிற. தோன் தந்த புகழ்—வீரப் பிரதாபம்.]

## தேரின் வேகமும் உணர்ச்சி-வேகமும்

தேர் இப்போது முன்னிலும் வேகமாக ஓடுகிறது:

மின்பொருவு தேரின்மிசை
 வீரன்வரு போழ்தில்,
தன்பொருவில் கன்றுதனி
 தாவிவரல் கண்டாங்(கு),
அன்புருகு சிந்தையொடும்
 ஆவுருகு மாபோல்,
என்புருகு நெஞ்சுருகி
 நஞ்சுருகி நிற்பார்.

[மின்பொருவு—மின்னலை ஒத்த. போழ்தில்—பொழுது. தன் பொருவில்—தனது ஒப்பில்லாத. கண்டாங்கு—கண்ட அப்பொழுது. ஆ—பசு. உருகு மாபோல்—உருகும் விதம் போல. என்பு—எலும்பு. நஞ்சுருகி—நைந்து உருகி.]

பொன்மயமான ராமன் தேர் மின்னல் போலப் பாய்ந்து செல்ல, தாவி வரும் கன்றைக் கண்ட தாய்ப் பசுவைப் போல் உருகி நிற்கிறார்கள், அந்த வரவை எதிர் பார்த்துக் கொண்டு நின்றவர்கள் எல்லாம்.

சிலர் சித்திரம் போல நின்று விடுகிறார்களாம் உருகித் திகைத்த நிலையில். வேறு சிலர், கைகேயியைப் பாராட்டுகிறார்கள்: 'இவன், தாய் கையிலா வளர்ந்தான்? கைகேயி அல்லவா தாயாக வளர்த்து விட்டாள்? இப்போது எவ்வளவு உவகையுடன் இவனுடைய பட்டாபிஷேகத்தை எதிர் நோக்கி யிருப்பாள்!' என்று மகிழ்ந்து போகிறார்கள்.

உணர்ச்சி எவ்வளவு வேகமாக ஓடுகிறது! கதை தான் எவ்வளவு ரஸமாக ஓடுகிறது, பாருங்கள். ராமனது சுந்தர மணித்தேர் போவது போலப் போகிறதல்லவா?

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 145. கூற்றாக வந்த தாயார்

“ராமனை அன்புடன் வளர்த்து வந்த கைகேயி அம்மாளே முடி சூட்டவும் அழைத்திருக்கிறாள்: அவளுடைய மகிழ்ச்சியைத்தான் எப்படி வர்ணிக்க முடியும்?” என்று பேசிக்கொண்டவர்கள் ஒரு புறம். வேறொரு புறம், “ராமன் முடிசூடி நமக்குப் பாதுகாப்பும் இன்ப வாழ்வும் அளிக்கப் போகிறான்; இந்த ராஜ்யத்திலே புது யுகம் பிறக்கப் போகிறது!” என்று குதூகலிக்கும் ஒரு கூட்டம்.

### புது யுகமா? பொது யுகமா?

இக்கூட்டத்தினரின் இக்குதூகலத்தை இக்கவிதைக் கண்ணாடி வாயிலாகப் பார்ப்போம்:

‘பாவமும் அருந்துயரும்
வேர்பறியும்!’ என்பார்;
‘பூவலயம் இன்றுதனி
அன்று;பொது!’ என்பார்;
‘தேவர்பகை உள்ளனஇவ்
வள்ளல்தெறும்!’ என்பார்;
‘ஏவல்செயும் மன்னர்தவம்
யாவதுகொல்?’ என்பார்.

[ அருந் துயரும் — நீக்குதற்கு அரிய துன்பங்களும். வேர்பறியும்— வேரோடு தொலையும். பூவலயம் — உலகமாகிய வட்டம். வள்ளல் — வண்மைக் குணமுள்ள ராமன். தெறும் — அழிப்பான். யாவது கொல்— எத்தன்மையுடையதோ. ]

இப்படிக் குதூகலிக்கும் மக்கள் பேச்சினிடையே “பூவலயம் இன்று தனியன்று; பொது” என்றும் பிரஸ்தாபிக்கிறார்கள். “இது வரையில் இருந்த தனிப்பட்ட அரசன் அல்லது சக்ரவர்த்தி என்பதெல்லாம் போய், ‘நாமெல்லாரும் இந் நாட்டு மன்னர்!” என்ற நிலை வந்துவிடும் என்பது இவர்கள் எண்ணம். “இனி ராஜ்யம், மக்கள் எல்லாருக்குமே பொதுவுடைமை ஆகிவிடும்!” என்று கருதும் மக்கள் ராம ராஜ்யத்தை எப்படி மனக் கண்ணால் பார்க்கிறார்கள்!—பாருங்கள்.

## வீதி நிறையப் போகும் சௌந்தரியம்

இப்படி யெல்லாம் பொங்கிப் பெருகும் குதூகலத்திற்கிடையே செல்லும் ரதம் வீதி வழியாகப் போய்த் தசாதனது அரண்மனையை அடைகின்றது:

ஆண்(டு) இனைய ராய் இனைய
கூற, அடல் வீரன்,
தூண்டுபுர விப்பொருவில்
சுந்தர மணித்தேர்
நீண்டகொடி மாடம்நிரை
வீதிநிறை யப்போய்,
பூண்டபுகழ் மன்னன் உறை
கோயில்புக லோடும்.



[ஆண்டு — அப்பொழுது. இனையராய் — இப்படிப்பட்டவர்களாய். இனைய — இத்தகைய சொற்களை. அடல் வீரன் — வலிமை வாய்ந்த வீர ராமன். தூண்டு புரவி (சுமந்திரன்) — தூண்டிச் செல்லும் குதிரைகளையுடைய. பொருவில் — ஒப்பில்லாத. சுந்தரமணித் தேர் — அழகிய இரத்தினங்கள் இழைத்த

தேரில். நீண்ட கொடி மாடம் நிரை வீதி — நீண்ட கொடிகள் கட்டிய மாளிகைகள் வரிசையாக அமைந்த வீதிகள். பூண்ட புகழ் மன்னன் — புகழை ஆபரணமாகப் பூண்ட தசரதன். உறை — வசிக்கிற. கோயில் — அரண்மனை. புகலோடும் — புகுந்த அளவில். ]

வீதி நிறைந்து போகும் சுந்தர மணித் தேர் சக்ரவர்த்தியின் அரண்மனையை அடைந்ததும், ராமன் அங்கே தந்தையைக் காணுதவனுய்க் கைகேயியின் அரண்மனைக்கு உடனே போகிறுன். 'தாய் வேறு, சிறிய தாய் வேறு' என்ற எண்ணம் கொஞ்சமும் இல்லாததால் கைகேயியைத் தாயாகவே மதிக்கிறுன்.

## கொடுமையின் வடிவம்

இப்படி ராமன் வருவதைக் கண்ட கைகேயி அவனை எதிர்கொண்டு வருகிறுள். எத்தகைய மனநிலையோடு?

> 'நாயகன் உரையான் வாயால்;
> நான்இது பகர்வென்!' என்னுத்,
> தாயென நினைவான் முன்னே,
> கூற்றெனத் தமியள் வந்தாள்.

[ நாயகன்—கணவன். என்ஞ—என்று எண்ணிக் கொண்டு. தமியள்—தனிப்பட்ட கொடுமை வாய்ந்த கைகேயி. ]

சக்ரவர்த்தி உள்ளே மூர்ச்சித்துக் கிடக்கிறுரல்லவா? ராமன் அங்கே போய்த் தந்தையைப் பார்த்துவிடக் கூடாது என்பது கைகேயி - கவலை. தசரதனும் ராமனும் சந்தித்துச் சம்பாஷித்தால் காரியம் கெட்டுப் போகும் என்பது கைகேயி - பயம். எனவே 'நாயகன் வாக்கை நானே தெரிவிக்க வேண்டும்; அவர் தம் வாயால் சொல்ல மாட்டார்!' என்று தனக்குள் தானே சொல்லிக் கொண்டு வரும் கைகேயி கூற்றுக வரும் கொடுமையின் வடிவம் என்கிறுன் கவிஞன்.

உடலையும் உயிரையும் வேறு பிரித்துக் கூறுபடுத்துவது கூற்று: இந்தப் பெண் - யமனும் தசரதரையும் அவருக்கு உயிரான அருமை மகனையும் வேருகப் பிரித்துவிடப் போகிறுளல்லவா?

## பண்பின் வடிவம்

கைகேயியைக் கண்டதும் ராமன் பெரும் பணிவும் பக்தியும் தோன்ற வெகு நயமாக வணங்கி நிற்கிறுன். இந்நிலையை இதோ பாருங்கள்:

> வந்தவள் தன்னைச் சென்னி
> மண்ணுற வணங்கி, வாய்த்த
> சிந்துரப் பவளச் செவ்வாய்
> செங்கையில் புதைத்து, மற்றைச்
> சுந்தரத் தடக்கை தானை
> மடக்குறத் துவண்டு நின்றுன்,
> அந்திவந்(து) அடைந்த தாயைக்
> கண்டஆன் கன்றின் அன்னுன்.

[ சென்னி—தலை. சிந்துரப் பவளச் செவ்வாய்—செந்தூரத்தையும் பவளத்தையும் ஒத்த வாய். செங்கையில் புதைத்து—சிவந்த ஒரு கையால்

பொத்திக் கொண்டு. தடக்கை—பெரிய கை. தானை மடக்குற—வேட்டியின் முன்தானையை மரியாதையாக ஒதுக்கி. அந்தி—அந்தி நேரம். ஆன் கன்றின் அன்னன்—பசுவின் கன்றை ஒத்த ராமன்.]

தலை நிலத்தில் படும்படி ராமன் அவளைத் தண்டன் இடுகிறான். பிறகு எழுந்து பவளம் போன்ற அழகிய வாயைச் சிவந்த அழகிய கை ஒன்றால் பொத்திக் கொண்டு, அழகான மற்றக் கையால் ஆடையை மரியாதையாகச் சிறிது மடக்கி உள்ளம் நெகிழ்ந்து நிற்கிறான். நீண்ட நேரம் பிரிந்திருந்து மாலைப் பொழுதில் வந்து சேர்ந்த தாய்ப் பசுவைக் கண்ட கன்றை ஒத்திருக்கிறது அவனது மனநிலை. 'என்ன அன்பு! என்ன அடக்கம்! என்ன பண்பு! என்ன அழகு!' என்று நமக்கும் உள்ளம் நெகிழ்ந்து போகிறதல்லவா?

## கொடுமையினும் கொடுமை — பண்பினும் பண்பு

ஆனால் இவ்விதமாக நின்ற ராமனைப் பார்க்கும் கைகேயி உள்ளம் சிறிதும் நெகிழவில்லை. கூற்றைப் போல் கொடுமை வாய்ந்த அவ்வுள்ளம் இரும்பைப் போல் வலிமை வாய்ந்ததாகக் காண்கிறது. "அப்பா! உன் தந்தை உன்னிடம் சொல்லக் கருதிய வார்த்தை ஒன்றுண்டு. நீ சொல்லலா மென்றால் சொல்லுகிறேன்!" என்று பீடிகையாக வினயமாய்ப் பேசுவது போல் பேசுகிறாள். என்ன கொடுமையினும் கொடுமை!

அதற்கு அவன், "அம்மா! தகப்பனாரே கட்டளையிட, அதைத் தாயாராகிய நீரே உமது வாயால் எனக்குச் சொல்ல வாய்க்குமானால், அது எனக்குக் கிடைக்கும் பெரும் பாக்கியமல்லவா?" என்று சொல்லி,

"தந்தையும் தாயும் நீரே!
தலைநின்றேன், பணிமின்" என்றான்.

[தலைநின்றேன் — (நீர் சொல்லப் போவதைத்) தலைமேற்கொண்டு நின்றேன். பணிமின் — கட்டளை யிட்டருள வேண்டும்.]

கைகேயி சொன்ன வார்த்தை கேட்டு ராமன், 'ஏதோ ராஜ்ய பரிபாலன விஷயமாகத் தந்தை புத்திமதி சொல்லக் கருதுகிறார். அந்த நல்வாக்கைத் தாயினும் சிறந்த கைகேயி மூலம் சொல்லச் செய்வது நலமென்றும் கருதியிருக்கிறார்' என்று தான் எண்ணியிருக்க வேண்டும். இந்த மனநிலையில் கைகேயியைத் தந்தையாகவும் தாயாகவும் ஒருங்கே பாவித்து அவளுடைய கட்டளையை நிறைவேற்ற ஒப்புக்கொள்கிறான் ராமன். என்ன வசீகர மனப் பண்பு!

கைகேயி உள்ளமோ ராமனுடைய இந்த வார்த்தைகளாலும் சிறிதும் அசையவில்லை. தன் கட்டளையை நிறைவேற்ற அவனே தயாராக இருப்பதாய்ச் சொல்லி விட்டானே! — அவ்வளவுதான், கைகேயிக்கு ஒரே துணிச்சல்: அப்படியே பேச ஆரம்பிக்கிறாள்.

இந்நிலையில் வார்த்தைகள் எப்படி வந்து விழுகின்றன என்பதை இனிமேல் பார்க்கலாம்.

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 146. செந்தாமரையை வென்ற முகமலர்

ராமன் சிறிய தாயைப் பார்த்து "தந்தையும் நீரே, தாயும் நீரே; உம்முடைய பணியைத் தலைமேல் கொண்டு நின்றேன்" என்று சொன்னதும், ஒரே துணிச்சலுடன் கட்டளை யிடுகிறாள் அச் சிறிய தாய்:

"ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீபோய்த்
தாழ்இருஞ் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவம்மேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ்இரண்(டு) ஆண்டின் வாஎன்(று)
இயம்பினன் அரசன்" என்றாள்.

[ஆழி — கடல். ஆழி சூழ் உலகம் — (இங்கே) ராஜ்யம். தாழ் இரு — தொங்குகின்ற பெரிய. தாங்கு அரு — தாங்குதற்கு அரிய. பூழி — புழுதி. வெங்கானம் — கொடிய காடு. நண்ணி — சேர்ந்து. ஏழிரண்டு — பதினாலு. இயம்பினன் — சொன்னான்.]

### கொடுமையை வென்ற குதூகலம்

பரதன் நாடாள ராமன் காடாள வேண்டும் என்ற கொடுமையைத் தான் கைகேயி எவ்வளவு கொடுமையான விவரங்களுடன் தெரிவிக்கிறாள்! எனினும் 'புழுதி நிறைந்த கொடிய பாலைவனத்தை அடைந்து' என்று சொன்னதும் 'தசரதன் வார்த்தையாக அல்லவா தெரிவிக்கிறோம்?' என்ற நினைவு வருகிறது. ஆகவே "புண்ணியத் துறைகள் ஆடி, ஏழிரண்டாண்டின் வா" என்கிறாள். 'பதினாலு வருஷமா?' என்று ராமன் ஏங்கிப் போகாம லிருக்கவே 'ஏழ் இரண்டு ஆண்டு' என்றும், 'நீ போய்...வா' என்றும் அரசன் சொன்னதாகக் குறிப்பு.

இப்படிக் கொடுமையாகவும் கபடமாகவும் கைகேயி கூறியதைக் கேட்டதும் ராமனது முக மண்டலத்தில் ஏதாவது மாறுதல் உண்டா? எப்போதும் சந்தோஷமாகவே இருக்கும் முகம், இப்போது வழக்கமான சந்தோஷத்தையும் சௌந்தரியத்தையும் வென்று விடுகிறதாம்:

இப்பொழு(து) எம்ம னோரால்
இயம்புதற்(கு) எளிதோ? யாரும்
செப்பருங் குணத்(து)இ ராமன்
திருமுகச் செவ்வி நோக்கின்;
ஒப்பதே முன்பு, பின்பு
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு(து), அலர்ந்த செந்தா
மரையினை வென்ற(து) அம்மா!

[ எம்மனோரால் — எம்மைப் போன்ற கவிஞர்களால். இயம்புதற்கு — சொல்வதற்கு. செப்பரு — சொல்லுதற்கு அரிய. திருமுகச் செவ்வி — திருமுக மண்டலத்தின் அழகு. நோக்கின் — பார்த்தால். அலர்ந்த — மலர்ந்த. அம்மா — ஆச்சரியக் குறிப்பு. ]

எப்பொழுதும் ராமனுடைய முகம் அப்பொழுது மலர்ந்த செந்தாமரைபோல் புத்தப் புதிய மகிழ்ச்சியுடனும் அழகுடனும் விளங்குமாம். கைகேயி காட்டுக்குப் போகச் சொன்ன இப்பொழுதோ, அப்பொழுது மலர்ந்த செந்தாமரையையும் வென்று விடுகிறதாம்.

## துயரத்தை வென்ற அருள்

தந்தை கட்டளை என்று கைகேயி ராமனைக் காட்டுக்குப் போகச் சொன்னாளோ இல்லையோ, ராமனுக்கு இல்லாத மகிழ்ச்சியும், மகிழ்ச்சியால் பெருகும் வசீகர அழகும் வந்து விட்டனவாம். அன்போடு தன்னை வளர்த்துவிட்ட கைகேயிக்கு 'என்னதான் கைம்மாறு செய்யலாம்?' என்று எவ்வளவோ உள்ளன்போடு ராமன் எண்ணிக்கொண்டிருப்பானென்று கருதலாம். இப்போதோ அவளுடைய உள்ளத்திற்கு உண்மையாகவே திருப்தி செய்யும்படியான சந்தர்ப்பம் வாய்த்துவிட்டதல்லவா? இதை நினைக்க ராமன் அகத்தில் ஒரே அன்பு-வெள்ளம், ஒரே ஆனந்தவெள்ளம்; அவ்வளவும் இப்போது முகத்திலே அலையெறிந்து அபூர்வ மலர்ச்சியையும் அழகையும் வசீகர சக்தியையும் காட்டி விடுகிறது.



எப்படிப்பட்ட 'துர்அதிர்ஷ்ட'த்தையும் பெரு மகிழ்ச்சியால் அநாயாசமாக வென்றுவிடும் ராமனது வசீகர முக மண்டலம் அப்படியே தெய்விகமாகச் சித்தரிக்கப்படுகி

றது இப்பாட்டிலே. லட்சிய ராமனது என்றும் வாடாத இச்சித்திரம், இன்பத்திலும் துன்பத்திலும் எப்பொழுதும் தமிழர்களாகிய நமக்கு ஆறுதல் அளிக்கும் — உத்ஸாகமளிக்கும் என்பது திண்ணம்.

## கொடுமையும் அருளானது!

முடிசூட்டு விழாவையும், அதனாலேற்படும் பதவியையும் செல்வாக்கையும் போகத்தையும் எதிர் பார்த்த சாமானியனை நோக்கி, "நீ ராஜ்யத்தை இழந்து காட்டுக்குப் போ" என்று சொன்னால், அவன் முகம் எவ்வளவு கோணலாக, விகாரமாய்ப் போகும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது உண்மையினும் உண்மை. ராமனது அற்புதமான முகமலர்ச்சிக்கும் அவனது ஒப்பற்ற அக மகிழ்ச்சியே காரணமாகும். ராஜ்ய ஆசையும் பதவி-மோகமும் கொஞ்சமும் இடம் பெறாத உள்ளம், 'தந்தையின் கட்டளையை மீறுவது எப்படி?' என்றே ராஜ்ய பாரத்திற்கு இசைந்து நின்றதாம்.

ஆகவே ராமன் கண்களில் கைகேயி இரக்கமில்லாதவளாய்க் காணப் படவில்லை; விசேஷ அருள் உடையவளாக — ஏன், ஒரு புத்த பகவானாகவே — காணப்படுகிறாள்:



தெருளுடை மனத்து மன்னன்
ஏவலின் திறம்ப அஞ்சி,
இருளுடை உலகம் தாங்கும்
இன்னலுக்(கு) இசைந்து நின்றான்.
உருளுடைச் சகடம் பூண்ட
உடையவன் உய்த்த கார்ஏ(று),
அருளுடை ஒருவன் நீக்க,
அப்பிணி அவிழ்ந்த(து), ஒத்தான்.

[தெருள்—அறிவுத் தெளிவு. உடை — உடைய. ஏவல் — கட்டளை. திறம்ப — பிறழ்ந்து போவதற்கு. இருள் உடை உலகம் — மயக்கம் தருகின்ற உலகம். இன்னல் — வருத்தம். உருள் — உருண்டு போகும் சக்கரம். சகடம் — வண்டி. பூண்ட—பூட்டப்பட்ட. உடையவன—எஜமானன். உய்த்த—செலுத்திய. கார் ஏறு — கருங்காளை. அருளுடை ஒருவன் — அருளோடு கூடிய (புத்தனைப் போன்ற) ஒருவன். நீக்க — அவிழ்த்துவிட. அப்பிணி — அவ்வருத்தம்.]

இத்தகைய மனமகிழ்ச்சி முகமலர்ச்சியாகப் பிரதிபலிக்கும் போது. அப்பொழுது அலர்ந்த செந்தாமரையை வென்று ஜயக்கொடி கட்டுவதில் ஆட்சேபம் இல்லையல்லவா?

அருள் தூண்டிய அமுத மொழி

இனி இப்படிப்பட்ட மனத்திலிருந்தும் முகத்திலிருந்தும் உதிக்கும் வார்த்தை எவ்வளவு அழகாக உசிதமாக, அற்புதமாக இருக்க வேண்டும்:

மன்னவன் பணிஅன் றாகில்
    நும்பணி மறுப்ப னோ? என்
பின்னவன் பெற்ற செல்வம்
    அடியனேன் பெற்ற தன்றோ?
என் இனி உறுதி அப்பால்?
    இப்பணி தலைமேல் கொண்டேன்
மின்ஒளிர் கானம் இன்றே
    போகின்றேன், விடையும் கொண்டேன்

[ நும் — உமது. மின் ஒளிர் — மின்னல் ஒளி செய்யும். ]

என்பது கைகேயியை நோக்கி ராமன் சொல்லும் கடைசி வார்த்தை. "அம்மா! சக்ரவர்த்தி கட்டளையிடாமல் இருந்தால்தான் என்ன? உம்முடைய கட்டளையை மறுக்கத் துணிவேனா?" என்று பேசத் தொடங்கும் ராமன், "என் தம்பி வேறு, நான் வேறா? அவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றது தானே!" என்று சந்தோஷிக்கிறான். எவ்வளவு உயர்ந்த உண்மை! பிறர் பெற்ற செல்வத்தில் நாம் இவ்வளவு மகிழ்ச்சி கொள்வோமாயின், உலகம் புதிய உலகம் ஆகிவிடுமல்லவா?

ஆனால் ஆவலோடு பட்டாபிஷேகத்தை எதிர்நோக்கியிருக்கும் மக்கள் ராமனைப்போல் இவ்வளவு மன அமைதியும் ஆறுதலும் மகிழ்ச்சியும் அடையப் போகிறார்களா?

# சித்திர ராமாயணம்

### பி. ஸ்ரீ.

## 147. தாயின் சந்தேகம்

"காட்டுக்குப் போக வேண்டும்" என்று எதிர்பாராதபடி கைகேயி சொல்லியும், ராமன் மிக்க திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் "இப்போதே போகிறேன்" என்று சொல்லி அவள் அடிகளில் பணிகிறான். தந்தையைப் பார்த்து விடை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கூட நினைக்கவில்லை. அந்த மாளிகைக்குள்ளே தந்தை இருக்கிறார் என்பது ராமனுக்குத் தெரியும். எனினும், தான் சந்தித்து விட்டால் தன் மேலுள்ள பாசத்தால் அவர் வாக்குத் தவறிக் கைகேயியின் திருப்திக்குக் கேடு விளைத்து விடுவாரோ? — என்றுதான் கவலை.

### ஐயோ, அராஜகம்!

ஆகவே தந்தை இருந்த திசையை நோக்கிக் கைதொழுது விட்டுக் கைகேயி மாளிகைக்கு வெளியே போகிறான். சிறிய தாயின் மாளிகையிலிருந்து தன் தாயான கோசலையின் மாளிகைக்குப் போகிறான்:

என்றுகொண்(டு) இனைய கூறி,
அடியிணை இறைஞ்சி மீட்டும்,
தன்துணைத் தாதை பாதம்
அத்திசை நோக்கித் தாழ்ந்து,
பொன்திணி போதி னாளும்
பூமியும் புலம்பி நையக்,
குன்றினும் உயர்ந்த தோளான்
கோசலை கோயில் புக்கான்.

[என்றுகொண்டு — மேலே சொன்ன மனப்பான்மையுடன். இனைய — இவ்விதமாக. அடியிணை இறைஞ்சி மீட்டும் — அடிகள் இரண்டையும் மறுபடியும் வணங்கி. தன் துணைத் தாதை — தனக்கு எவ்வகையிலும் துணையாக உள்ள தந்தை. பொன்திணி போதினாளும் — அழகிய செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கும் மகாலட்சுமியும். கோயில் புக்கான் — மாளிகையை அடைந்தான்.]

லட்சுமிதேவியும் பூமிதேவியும் புலம்பினார்கள் என்றால், என்ன? "ஐயோ, அராஜகம் வந்து விடுமே! செல்வமும் பயிர்த் தொழிலும் பாதுகாப்பில்லாமல் சோழிந்து போகுமே!" என்ற கவிஞன் புலம்பல்தான்.

## எதிர்பார்த்ததும், பார்த்ததும்

பட்டாபிஷேகத்தை முன்னிட்டு அயோத்திமா நகரத்தில் தெருவெல்லாம், வீடெல்லாம் ஒரே உத்ஸாகம். கோசலையின் அரண்மனைக்கு முன்பும் மக்கள் சந்தோஷ ஆரவாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த ஆரவாரங்களை அனுபவித்துக்கொண்டு கோசலையும் ராமனை எதிர்பார்த்திருக்கிறாள்.

"முடிசூடி வருவான்; இரு புறமும் வெண்சாமரை வீசிக்கொண்டு வருவார்கள்; அதோ முத்துச் சரங்கள் தொங்கச் சந்திர வட்டக் குடை பிடித்து வருகிறார்கள். முன்னே ஒருவன் 'மகாராஜாதி ராஜா வருகிறார்' என்று ஆடம்பரமாய்க் கட்டியம் கூறி வருகிறான். பின்னே அரசர்களெல்லாம், அமைச்சர்களெல்லாம், அணி வகுத்த முறையில் வந்து கொண்டிருக்கிறார்கள்!"

இவ்வளவும் உண்மையா? கோசலையின் மனக் கண்முன் உண்மையாகத் தோன்றும் ஆனந்தக் காட்சிகள் இவை. மனக்கண்முன் தோன்றிய ராமன் இப்போது புறக் கண்ணுக்கும் இலக்காகி வருகிறான். ஆனால் எப்படி வருகிறான்?

குழைக்கின்ற கவரி இன்றிக்,
  கொற்றவெண் குடையும் இன்றி,
இழைக்கின்ற விதிமுன் செல்லத்,
  தருமம்பின் இரங்கி ஏங்க,
'மழைக்குன்றம் அனையான் மௌலி
  கவித்தவன், வரு(ம்)!' என்(று) என்(று)
தழைக்கின்ற உள்ளத்(து) அன்னாள்
  முன்,ஒரு தமியன் சென்றான்.

[ குழைக்கின்ற — குழைந்து வீசுகிற. கவரி — வெண் சாமரை. கொற்றவெண்குடை — வெண்கொற்றக் குடை; வெண் முத்துச் சரங்களால் அலங்கரிக்கப் பெற்று அரசர்மீது பிடிக்கும் சந்திர வட்டக் குடை: இது அரசுரிமைக்கு உரிய சின்னங்களில் ஒன்று. மழைக்குன்றம் — மழை பொழிவதற்காக மேகங்கள் திரண்டு வந்து தங்கும் மலை. அனையான் — போன்றவன். மௌலி — கிரீடம். கவித்தனன் — கவித்துக்கொண்டவனாய். உள்ளத்து அன்னாள் — உள்ளத்தையுடைய கோசலை. ஒரு தமியன் — தன்னந் தனியனாக. ]

மழை பொழிவதற்காக மேகங்கள் திரண்டு வந்து மலையில் கவிந்து கொள்வதைப் பார்க்கும்போது, நமது கண்ணும் குளிர்கின்றது; நெஞ்சம் குளிர்கின்றது. இக்காட்சி யின்பத்தோடு, 'ஆறும் குளமும் குறை தீர்ந்து நிறையும்; காடு செழிக்கும்' என்ற எண்ணமும் சேர்ந்து கொள்ளும்போது நமக்கு என்ன மகிழ்ச்சி; எவ்வளவு குதூகலம்! இப்படிப்பட்ட குளிர்ச்சியும் குதூகலமும் ராமனைக் காணும்தோறும், நினைக்கும்தோறும் தாயாகிய கோசலைக்கு ஏற்படுவதுண்டு.

"இப்பொழுது அவன் கிரீடமும் தலையுமாய்என்னை நோக்கி விரைந்து வருகிறான். சக்ரவர்த்தியின் அதிகார ஆடம்பர வைபவங்களோடும், ராஜ்ய பாரம் தாங்குவதற்கு உரிய அடையாளங்களோடும் என் கண்மணி இதோ என் கண் குளிர வந்து விடுவான்!" என்று நினைக்கிறாள் கோசலை. மழை முகம் நோக்கித் தழைக்கும் பயிர்போல ராமன் வருகையை எதிர்நோக்கித் தழைத்துக் கொண்டிருக்கிறது தாயின் உள்ளம்.

இத்தகைய கோசலைக்கு முன் அரசுச் சின்னம் ஒன்றுமில்லாமல், பரிவாரமுமில்லாமல், தன்னந் தனியனாக ராமன் வருகிறான். 'பக்கத்திலே சாமரம் வீசவில்லை; தலைக்குமேல் சந்திர வட்டக் குடை பிடித்திருக்கவில்லை' என்று தொடங்கும் கவிஞன் 'முன்னே ஆடம்பரமாய்க் கட்டியங் கூறிச் செல்லவில்லை; பின்னே மரியாதையாக கைகட்டிச் செல்வதற்கு வேலைக்காரர்கள் கூட இல்லை!' என்பதை,

இழைக்கின்ற விதிமுன் செல்லத்,
தருமம்பின் இரங்கி ஏங்க



என்று குறிப்பிடுகிறான்.

கட்டியம் கூறவேண்டிய ஸ்தானத்தில், வாழ்க்கையை உருவாக்குகிற விதி செல்கிறதாம். இவனை வையும் இழைத்து விட்டு, 'வா, வா' என்று சொல்லிக் கொண்டும், 'இதோ வருகிறான் சக்ரவர்த்திக் கோலத்தை அறவே துறந்து' என்று தெரிவித்துக் கொண்டும்,' விதி முன்னால் செல்கிறதாம்.

பின் தொடர்ந்து செல்வோரது ஸ்தானத்தில் ஒரே ஆசாமியைத்

தான் பார்க்கிறோம். அந்த ஆசாமி வேறு யாருமில்லை, அப்பாவி தர்மம்தான்! "தர்மம் பின் இரங்கி ஏங்க" என்று கூறுவது கவனிக்கத் தக்கது. எப்பொழுதும் ராமனைத் தொடர்ந்து செல்லும் தர்ம தேவதையும் இனி அவன் பின்னே நெருங்கிச் செல்ல முடியாமல் வருந்தி ஏங்கும்படி, அவ்வளவு கஷ்டமான — காடு முரடான — நெறியிலே விதி ராமனை அழைத்துப் போகிறது என்பது குறிப்பு.

## சந்தேகமும் வாழ்த்தும

ராமன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்ட தாய்— 'மௌலி கவித்தனன் வரும்' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த கோசலை—'தலையில் கிரீடத்தைக் காணவில்லையே! என்ன காரணமோ?' எனப்பளிச்சென்று சந்தேகப்படுகிறாள்.

ராமன் அருகில் வந்து வணங்குகிறான். தலையைத் தொட்டுப் பார்க்கிறாள் தாய். "மங்கள ஸ்நானம் செய்து தலை நனைந்திருக்க வேண்டுமே, அதுவும் இல்லையே!" என்று சந்தேகம் வலுக்கிறது. மகிழ்ச்சியால் திளைத்த உள்ளம் இப்பொழுது சிறிது வாட்டமடைகிறது. இந்நிலையில் தன் அடிகளில் விழுந்து வணங்கிய மகனைத் தாய் குழைந்து வாழ்த்தித் தன் சந்தேகம் தீரக் கேள்வி கேட்கிறாள்.

இந்நிகழ்ச்சியும், தாய் கேட்கும் கேள்விகளும் இப்பொழுது தான் நம் முன் நடை பெறுகின்றனவோ என்று நாம் சந்தேகிக்குமாறு சித்திரிக்கப் பெறும் அதிசயத்தை இனிமேல் பார்க்கலாம்.

# சித்திர ராமாயணம்

### பி. ஸ்ரீ.

## 148. தியாகப் போட்டி

கோசலைக்கு விஷயம் விளங்கவில்லை. அருமையாக வாழ்த்தி, "நினைத்த காரியம் என்ன ஆயிற்று? முடி சூடுவதற்கு இடையூறு உண்டோ?" என்று கேட்கும் தாயையும், அவள் காலில் வணங்கிக் கொண்டிருக்கும் ராமனையும் இதோ பாருங்கள் :

'புனைந்திலன் மௌலி; குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன்; என்கொல்?'— என்னும்
ஐயத்தாள் நளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன்
வணங்கலும், குழைந்து வாழ்த்தி
'நினைந்த(து)என்? இடையூ(று) உண்டோ
நெடுமுடி புனைதற்கு?' என்றாள்.

[புனைந்திலன் மௌலி — முடி சூடவில்லை. குஞ்சி — தலைமயிர். புனிதம் — பரிசுத்தம். நனைந்திலன் — நனைந்ததாக இல்லையே. என்கொல் — என்ன காரணமோ. ஐயத்தாள் — சந்தேகம் கொண்ட கோசலை. நளின பாதம் — தாமரைபோன்ற பாதம். வனைந்த பொற் கழற்கால் வீரன் — பொன்னினால் செய்த வீரக்கழலை அணிந்த அடிகளையுடைய ராமன். நினைந்தது — நினைத்த காரியம். என் — என்ன ஆயிற்று. நெடுமுடி — சக்ரவர்த்திக்கு உரிய பெரிய கிரீடம். புனைதற்கு — சூடுவதற்கு.]

### "உன் மகன்தானே முடி சூடுகிறான்!"

"பட்டாபிஷேகத்திற்கு இடையூறு உண்டோ?" என்ற கோசலையின் கேள்விக்கு ராமன் என்ன பதில் சொல்லக் கூடும்? அவ்வளவு அருமையாக வாழ்த்தி அப்படிப் பளிச்சென்று கேட்டு விட்டதும், ராமன் திகைத்துப் போயிருக்க வேண்டும். சிறிது ஆலோசனை பண்ணி மெள்ளப் பேச ஆரம்பிக்கிறான். அவள் கேள்விக்குச் சாதுரியமாக ராமன், "பட்டாபி

ஷேகத்திற்கு இடையூறு இல்லை. உன் காதல் - திருமகனும், குற்றமில்லாத என் தம்பியுமாகிய பரதனே முடிசூடுகிறான்" என்று உறுதி கூறுகிறான் :

மங்கை அம்மொழி
    கூறலும், மானவன்
செங்கை கூப்பி, 'நின்
    காதல் — திருமகன்,
பங்கம் இல்குணத்(து)
    எம்பி பரதனே,
துங்க மாமுடி
    சூடுகின் றான்'என்றான்.

[ மானவன் — மனு வம்சத்தில் பிறந்த ராமன். செங்கை — சிவந்த கை. நின்காதல் திருமகன் — உன்னுடைய அன்பிற்கு உரிய மகன். பங்கம் இல்குணத்து — குற்றம் இல்லாத நற்குணம் உடைய. எம்பி — தம்பி. துங்க மாமுடி — உயர்வும் பெருமையும் வாய்ந்த கிரீடம். ]

### "உன் தம்பி உன்னிலும் நல்லவன்!"

இப்படிப் பேசும் ராமன், இனிமேல் தாயின் நிலைமை எப்படியிருக்கிறது என்று தெரிந்துகொண்டு மேலே பேச வேண்டுமென்று தீர்மானிக்கிறான். அவள் பேசுகிறாள் :

'முறைமை அன்றென்ப(து)
    ஒன்றுண்டு ; மும்மையின்
நிறைகு ணத்தவன்
    நின்னினும் நல்லனால்,
குறைவி லன்' எனக்
    கூறினள், நால்வர்க்கும்
மறுவில் அன்பினில்
    வேற்றுமை மாற்றினாள்.

[ முறைமை — வாரிசுக் கிரமம். மும்மை — மூன்று. மும்மையின் நிறைகுணத்தவன் — தாமஸம், ராஜஸம், ஸாத்விகம் என்ற மூன்று குணங்களுள், நிறைந்த குணமாகிய ஸாத்விகத்தை உடையவன். நின்னினும் நல்லவன் — உன்னைக் காட்டிலும் சிறந்தவன். நல்லனால் — நல்லவன் என்பது நிச்சயம். மறுவில் — குற்றமற்ற. ]

"மூத்தவன் இருக்க இளையவன் அரசாளுதல் முறையன்று என்கின்ற ஒரு குறை மாத்திரமுண்டு. மற்றப்படி பரதன் குறைவில்லாதவன், குணசாலி; உன்னைக் காட்டிலும் நல்லவன்!" என்று பேசும் கோசலையின் மன நிலையைப் பாருங்கள். சாதாரண ஸ்திரீயாக இருந்தால் துயரம் மேலிட்டு மூச்சையடைக்க மூர்ச்சையாக விழுந்திருப்பாளே!

பரதன் முடி சூடாமல் போனால் தன் உயிரையே விட்டுவிட வேண்டுமென்று கைகேயி சொல்லவில்லையா? ஆனால், கோசலை ஒப்பற்ற உயர்ந்த பண்பு வாய்ந்தவள்; ராமலட்சுமண பரத சத்ருக்கனர் என்ற நாலு பிள்ளைகளையும் ஒரு நிகராக நினைப்பவள். 'குடும்பம் க்ஷேமமாக இருக்க


வேண்டும்; நாடு எப்படியாவது நலம் பெறவேண்டும்' என்று நினைக்கிறவன். கைகேயி போல் கேவலம் உணர்ச்சிவசமாக நடந்து கொள்ளாமல் அறிவுத் திறமையினால் நால்வரிடத்திலும் வேற்றுமை கருதாமல் ஒரே மாதிரி அன்பு செலுத்தி வந்தாள்.

## "நீயே ராஜ்யத்தைக் கொடுத்துவிடு!"

'ராமன் ஆண்டாலென்ன, பரதன் ஆண்டாலென்ன, எல்லாரும் க்ஷேமமாயிருக்க வேண்டும்' என்ற மனப்பான்மையுள்ள கோசலை மேலும் பேசுகிறாள்:

என்று, பின்னரும்,
 'மன்னவன் ஏவிய(து)
அன்(று)எ னாமை,
 மகனே உனக்(கு)அறன்!
நன்று நும்பிக்கு
 நானிலம் நீகொடுத்(து),
ஒன்றி வாழுதி
 ஊழிபல!' என்றாள்.

[அன்று எனாமை — அநியாயம் என்று மறுத்துச் சொல்லாமல் கீழ்ப்படிவது. நும்பிக்கு — உன் தம்பிக்கு. நானிலம் — ராஜ்யம். ஒன்றி — ஒற்றுமையாக. வாழுதி — வாழ்வாயாக. ஊழி — நீண்ட காலம்.]



ராமன் தாயல்லவா? பெருந்தன்மையிலும் தியாக புத்தியிலும் மகனோடு போட்டி போடப் பார்க்கிறாள்! ராஜ்யத்தை இழப்பது குறித்துச் சிறிதும் மனத்தாங்கல் கொள்ளாமல் தாயார் தான் எதிர்பார்த்ததற்கு மேலான மன அமைதியோடும், திருப்தியோடும், பிதுர் வாக்கிய பரிபாலனம் செய்ய வேண்டுமென்று தன்னையே தூண்டக்கூடிய தைரியத்தோடும், இருப்பதைக் கண்ட ராமன், காட்டுக்குப் போக வேண்டுமென்ற கட்டளையையும் வெளியிடுகிறான்.

எனினும் அதை உடனே வெளியிட்டு விடாமல் அதற்கு ஒரு முன்னுரையாக, "சக்ரவர்த்தி என்னை நன்னெறியில் செலுத்துவதற்கு நியமித்திருக்கும் கட்டளை ஒன்று உண்டு" என்று சொல்கிறான்:

நாயு ரைந்தசொல்
கேட்டுத்த ழைக்கின்ற
தூய சிந்தைஅத்
தோம்இல்கு ணத்தினன்,
'நாய கன்எனை
நன்னெறி உய்ப்பதற்(கு),
ஏய துண்(டு)ஓர்
பணி' என்(று) இயம்பினன்.

[ தழைக்கின்ற — மன எழுச்சி கொண்ட. தோமில் — குற்றமில்லாத. நாயகன் — (இங்கே) சக்ரவர்த்தி. உய்ப்பதற்கு — செலுத்துவதற்கு. ஏயது — ஏவியது. பணி — (இங்கே) கட்டளை.]

"அந்தக் கட்டளை யாது?" என்று கோசலை கேட்கிறாள். அப்பொழுதும் ராமன் அதை அப்படியே வெளியிட்டு விடாமல் அதன் கொடுமையை மட்டுப்படுத்தி, "ஏழோடு ஏழு ஆண்டு காட்டிலே ஞான மூர்த்திகளான மகரிஷிகளோடு சேர்ந்து தங்கிப் பிறகு நீ திரும்பி வரவேண்டும் என்பதாகச் சக்ரவர்த்தி கட்டளையிட்டார்" என்று தெரிவிக்கிறான்.

இப்படி ராமன் சொல்வதைக் கம்பன் வாக்கிலேயே தெரிந்து கொள்வோம்.

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 149. தாயின் துயரம்

தான் காட்டுக்குப் போகவேண்டியிருப்பதை உடனே வெளியிட்டு விடாமல் அதற்கு ஒரு முன்னுரையாக, "சக்ரவர்த்தி என்னை நன்னெறியில் செலுத்துவதற்கு நியமித்திருக்கும் கட்டளை ஒன்றுண்டு" என்று ராமன் சொல்லியதும், "அந்தக் கட்டளை யாது?" என்று கோசலை வினவுகிறாள். அப்பொழுதும் ராமன் அதை அப்படியே வெளியிட்டு விடாமல் அதன் கொடுமையை மட்டுப்படுத்தி, "ஏழோடு ஏழு ஆண்டுகள் ஞான மூர்த்திகளான மகரிஷிகளோடு காட்டிலே தங்கிப் பிறகு நீ திரும்பி வரவேண்டும் என்பது சக்ரவர்த்தியின் கட்டளை" என்று தெரிவிக்கிறான்.

### தாயைப் பார்க்கிறோம்!

இவ்வளவு சாமர்த்தியமாக ராமன் அந்தச் செய்தியைத் தெரிவித்த போதிலும், "மீண்டு நீ வரல் வேண்டும் என்றார் சக்ரவர்த்தி" என்பதை அழுத்திச் சொல்லிய போதிலும் தாயுள்ளம் தாங்கமுடியவில்லை. ராமனுக்கு முடி சூட்டுவதற்கு மாறாகப் பரதனுக்குப் பட்டங் கட்டுகிறார்கள் என்ற செய்தியை அமைதியாக ஏற்றுக் கொண்டவள், இப்போது கடைசியாக ராமன் சொன்னதைப் பொறுக்க முடியவில்லை. அரசாங்கமும் அதிகார ஆடம்பரங்களும் இவள் பொருட்படுத்தும் காரியங்களல்ல. ஆனால் இத்தகைய மனப்பண்பு வாய்ந்தவளும் தாய்மைப் பண்பு வாய்ந்தவள்தானே?

"காட்டுக்குப் போகிறதா? என்ன பேராபத்து வந்து விடுமோ? புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டு போய்விட்ட கதைபோலிருக்கிறதே!" என்று எண்ணியதும் எப்படித் துடிதுடிக்கிறாள்! ராமன் கடைசியாகச் சொன்ன அந்த வார்த்தையும் ஒரு வார்த்தைதானா? அனலை அள்ளிக் காதில் போட்டதுபோல் அல்லவா இருந்தது?

இந்தத் தாயின் நிலைகொள்ளாத நிலையை இதோ கவிஞன் காட்டக் காண்போம்:

ஆங்(கு)அவ் வாசகம்
என்னும்அ னல்,குழை
தூங்கு நன்செவி
யில்தொட ராமுனம்
ஏங்கி னாள்,இளைத்
தாள்திகைந் தாள்,மனம்
வீங்கி னாள்,விம்மி
னாள்,விழுந் தாளரோ !

[ ஆங்கு — அச்சமயத்தில். குழை தூங்கு — குழை யென்ற காதணி தொங்கிக் கொண்டிருக்கும். தொடராமுனம் — தொடர்ந்ததோ இல்லையோ; வந்து விழுந்ததோ இல்லையோ. மனம் வீங்கினாள் — உள்ளேயிருந்து துன்பம் மனசைப் புண்ணாக்கி வீங்கி வெடித்துப் போகச் செய்யுமோ என்பது போன்ற உணர்ச்சி யடைந்தாள்.

தான் காட்டுக்குப் போக வேண்டும் என்று மகன் சொன்ன வாசகம் காதைச் சுட்டு விட்டதாம். அது காதில் விழுந்ததோ இல்லையோ, தாய் கீழே விழுந்து விட்டாள். அப்படி விழுவதற்கு முன் அவள் ஏங்கிப்போவதும், சோர்ந்து போவதும், ஒன்றும் செய்யத் தெரியாமல் திகைத்துப் போவதும், மனம் வீங்கி வெடித்துப் போகும் நிலையில் இதயம் விம்முவதும் நம் மனக் கண் முன் அப்படியே நிகழ்கின்றன. அவள் அப்படியே தரையில் சோர்ந்து விழுவதையும், விழுந்து விடுவதையும் பார்த்து விடுகிறோம்.

## புலம்பலைக் கேட்கிறோம் !

கைகேயியைப்போல் கோசலை கேவலம் உணர்ச்சி வசமாக இருப்பவள் அல்லள்; விசேஷ அறிவுத் திறமை வாய்ந்தவள் தான். எனினும், தன் அருமை மகன் காட்டுக்குப் போக வேண்டுமென்பதை அறிந்ததும், உணர்ச்சி அறிவையும் மழுங்கச் செய்து விடுகிறது. சக்ரவர்த்தியின் வாசகத்தை அப்படியே அங்கீகரிக்க வேண்டுமென்று ராமனுக்குப் புத்தி சொன்னவள், இப்பொழுது அதைக் குறித்து என்ன சொல்லிப் புலம்புகிறாள், பாருங்கள் :

வஞ்ச மோ,மக
னே ! உனை மாநிலம்
தஞ்ச மாகநீ
தாங்(கு)என்ற வாசகம்
நஞ்ச மோ? இனி
நானுயிர் வாழ்வனோ ?
அஞ்சும், அஞ்சும்,என்
ஆருயிர் அஞ்சுமால்.

[ மாநிலம் - (இங்கே) ராஜ்யம். தஞ்சமாக - ஓர் அடைக்கலப் பொருள் போல. ]

தரையில் விழுந்து கிடந்த கோசலை இப்போது எழுந்து உட்காருகிறாள். உள்ளத்திற்குள் பல வகையான எண்ணங்கள் சுற்றிச் சுழல்கின்றன. வாய் புலம்புகிறது. பட்டாபிஷேகம் ராமனைக் காட்டுக்கே துரத்தி விட்டது! — என்று நினைக்கிறாள். ராமன் அரசாள வேண்டுமென்று சக்ரவர்த்தி சொன்ன வார்த்தை வஞ்சனைதானோ என்றுகூடச்

சந்தேகிக்கிறாள். "அந்த வாசகம் வஞ்சமோ, நஞ்சமோ?" என்று கதறுகிறாள். "ஆமாம், எனக்கு ஒரு மாதிரி வருகிறது; நஞ்சைத்தான் தெரியாமல் உட்கொண்டு விட்டேனா? ஐயோ! இனி நான் எப்படி உயிர் வாழப் போகிறேன்? என் பிராணன் நடுங்குகிறதே!" என்றெல்லாம் புலம்பிக் கொண்டே நடுநடுங்குகிறாள்!

புத்திரசோகம் எப்படித் தாக்குகிறது தாயுள்ளத்தை! இந்நிலையிலுள்ள தாயின் துயரத்தைச் சொற்களால் அளவிட்டுரைப்பது எவருக்கும் இயலாத காரியம். எனினும் துன்பக் கடலில் ஆழ்ந்து கரை காணாது திகைக்கும் தாயைக் கம்பன் தன் சொற்கலையாகிய மந்திர வித்தையால் அப்படியே நமக்குக் காட்டி விடுகிறான்.

அவள் திடீரென்று ஏங்கிப் போவதைக் காண்கிறோம். "இவள் இத்தனை நிமிஷத்திற்குள் எப்படி இளைத்துப் போனாள்! இவள் தானா கோசலை?" என்று ஆச்சரியப் படுகிறோம்.

ஒரு சமயம் பிரமித்து மயங்கிப் பைத்தியம் பிடித்தவள் போலக் காணப்பட்டாள். ஒரு சமயம் குழந்தை போல் பொருமிப் பொருமி விம்மினாள். நிற்கவும் முடியாமல், உட்கார்ந்திருக்கவும் முடியாமல், கீழே விழுந்து விட்டாள். சிறிது நேரம் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் புறப்படவில்லை; பிறகு வாய்விட்டுக் கதறினாள்.



## துயரத்தில் கலந்து கொள்கிறோம்!

பிரலாபத்தைத் திடீரென்று நிறுத்தி விடுகிறாள்: அப்படி ஏன் ஒரு கையை மற்றொரு கையால் நெரித்துக்கொள்கிறாள்? ஏன் வயிற்றைக் கைகளால் பிசைகிறாள்? பெற்ற வயிறு என்ன செய்கிறதோ? ஆ, ஆ, எப்படிப் பெருமூச்சு விடுகிறாள்! ஏதோ சொல்லத் தொட

ங்கி அதைச் சொல்ல முடியாமல் விழுங்குகிருளே! அவளுடைய உடம்பும் உள்ளமும் எவ்விதமாக வெதும்பிப் புழுங்குகிறதோ?

அவ்வளவு துன்பத்திற் கிடையில் அந்தச் சிரிப்பும் வருமா? "நன்று, மன்னன் கருணை!" என்று சிரிக்கிருள். என்ன மாயச் சிரிப்போ?

திடீரென்று எதிரே நிற்கும் ராமனைப் பார்த்து, "எப்போது காட்டுக்குப் போகவேண்டும்?" என்று கேட்டுக் கொண்டே எழுந்திருக்க முயல்கிருள். தானும் அவனுடன் காட்டுக்குப் புறப்பட வேண்டி யிருப்பது போலக் கேட்கிருள்; புறப்படத் தயாராகி விட்டதாகவே எண்ணம். ஆனால் எழுந்திருக்கத்தான் முடிய வில்லை!

எதிரே நிற்கும் ராமனைப் போலவே நாமும் கோசலையின் மரண வேதனை போன்ற கொடுந் துன்பத்தைப் பார்த்து வருந்துகிறோம். "அப்பா! அரசர் உன்னிடத்தில் எவ்வளவு அன்போடு இருந்தார்? அவருக்கு நீ என்ன பிழை செய்தாய்?" என்று அவள் ஏங்கிக் கேட்கும் போது, நாமும் அவளுடைய துயரத்தில் அபேதமாகக் கலந்து, "ஐயோ!" என்று இரங்குகிறோம். பின்னும், "தருமம் என்பது எனக்கு இல்லையோ? தெய்வங்களே! என் பிராணன் நைந்து நைந்து அழியும்படி என்னை அடுத்திருக்கும் தீவினை தான் யாதோ?" என்று அவள் கரைந்து கலங்கும் போது, நாமும் அப்படியே கண்ணும் கண்ணீருமாய்க் கலக்கம் அடைகிறோம்.

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 150. 'பதினாலு நாள்தானே !'

'தர்மமே ஜயம்' என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்த கோசலைக்கு இப்போது எல்லாம் பயனற்றதாய்த் தோன்றுகிறது. அவள் கலங்கி அப்படியே தரையில் விழுந்து கிடக்கிறாள். சாதாரணப் பிள்ளையாக இருந்தால் நிலை கலங்கிப் போயிருப்பான், தாயின் நிலையைக் கண்டதும். ஆனால், ராமன் என்ன செய்கிறான் பாருங்கள் :

இத்தி றத்தின்
    இடர்உறு வாள்தனைக்,
கைத்த லத்தின்
    எடுத்(து), 'அருங் கற்பினாய் !
பொய்த்தி றத்தினன்
    ஆக்குதி யோ,புகல்,
மெய்த்தி றத்துநம்
    வேந்தனை நீ?' என்றான்.

[ இத்திறத்தின் – இந்த விதமாக. இடர் உறுவாள் தனை – துன்பமடையும் கோசலையை, கற்பினாய் – உறுதியான உள்ளத்துடன் கணவனது நன்மையை நாடி வாழ்பவளே. பொய்த் திறத்தினன் – பொய்க்கு உள்ளாகி விட்டவன். புகல் – சொல்லு. மெய்த் திறத்து நம் வேந்தனை- சத்தியத்திலே நிலைநிற்கிற நமது சக்ரவர்த்தியை. ]

ராமன் தன் தாயைத் தரையிலிருந்து கையால் தூக்கி உட்கார வைத்து, "அம்மா ! சத்தியமே ஜயம் என்று வாழ்க்கை நடத்தும் நம்முடைய சக்ரவர்த்தியைப் பொய்யன் என்று பிறர் வசை சொல்லும்படி செய்யலாமா ? நீயே சொல்லு, அம்மா !" என்று மெள்ளக் கேட்கிறான்.

### மூன்று பாக்கியங்கள்

மேலும், "என்றுமில்லாத பாக்கியம் இப்போது எனக்குக் கிடைத்திருக்கிறது என்றே நான் எண்ணுகிறேன். இதற்கு நீ வருந்தலாமா ?" என்கிறான். உண்மையில், மூன்று பாக்கியங்கள் கிடைத்திருக்கின்றனவாம். இவற்றை ராமன் வாயிலாகவே தெரிந்து கொள்வோம் :

சிறந்த தம்பி
திருஉற, எந்தையை
மறந்தும் பொய்யிலன்
ஆக்கி, வனத்திடை
உறைந்து நீரும்
உறுதிபெற் றேன்:இதின்
பிறந்து யான்பெறும்
பேறுஎன்ப(து) யாவதே?

[ திரு உற — ராஜ்யம் என்ற செல்வத்தை அடைய. எந்தை — என் தந்தை. உறைந்து — வசித்து. நீரும் — திரும்பி வருகின்ற. இதின் — இதனிலும். பேறு — பாக்கியம். யாவதே — எதுவோ. ]

சிறந்த தம்பியாகிய பரதன் ராஜ்யத்தை அடைவது ஒரு பாக்கியம். தந்தையை, மறந்தும் பொய் சொல்ல மாட்டார் என்ற புகழுக்கு உரியவராக்குவது இரண்டாவது பாக்கியம். இந்த இரண்டு பாக்கியங்களுடன், வனவாஸத்தையும் மூன்ருவது பாக்கியமாகக் குறிப்பிடும் மன நிலையை என்னென்பது? வனத்திலே பேரறிஞர்களான முனிவர்களுடன் வசித்து, அதனுல் கிடைக்கக்கூடிய பாக்யத்தையும் தான் பெற்றுத் திரும்பக்கூடும் என்பது குறிப்பு. "பிறவி எடுத்ததற்கு இம் மூன்று பாக்கியங்களைக் காட்டிலும் வேறு என்ன பாக்கியம்தான் கிடைக்கப் போகிறதோ?" என்கிருன். இம் மூன்று பாக்கியங்களுக்கும் காரணம் தனது வனவாசமாகையால், இதைக் காட்டிலும் வேறு என்ன பேறு வாய்க்கப்போகிறது? — என்கிருன்.

அப்பொழுது கோசலை பதில் சொல்லுகிருள். "குழந்தாய்! அப்படியானல் சக்கரவர்த்தியின் ஆணையை மீறும்படி நானும் சொல்லவில்லை. சாகத் தெரியாமல் உயிரைத் தாங்கிக்கொண்டிருக்கும் என்னையும் நீ போகும் அந்தக் காட்டுக்குக் கூட்டிக்கொண்டு போ!" என்கிருள்:

'ஆகில், ஐய!
அரசன்தன் ஆணையால்,
ஏகல் என்பது
யானும்உ ரைக்கிலேன்;
சாக லாஉயிர்
தாங்கவல் லேனையும்,
போகின், நின்னொடும்
கொண்டனை போ(க)!' என்ருள்.

[ ஆகில் — ஆனல். ஏகல் — போகாதே உரைக்கிலேன் — உரைக்க மாட்டேன். சாகலா உயிர் — சாகாமல் இந்த உடம்போடு ஒட்டிக் கொண்டிருக்கும் உயிர். போகின் — நீ போனல். கொண்டனை போக — கொண்டு போவாயாக.]

## அவள் தர்மம் வேறு

வனவாசம் பாக்கியமென்ருல் அந்தப் பாக்கியம் தனக்கும் கிடைக்கட்டும் என்று கோசலை சொன்னதும், ராமன் 'அவள் தர்மம் வேறு' என்பதை ஞாபகப் படுத்துகிருன்:

'என்னை நீங்கி
இடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை
வற்புறுத் தா(து), உடன்
துன்று கானம்
தொடரத் துணிவதோ?
அன்னையே! அறம்
பார்க்கிலை யாம்' என்றான்.

[இடர்க்கடல் — துயரக் கடல். வைகுறும் — விழுந்து தத்தளிக்கும். வற்புறுத்தாது — மன உறுதி அடையச் செய்யாமல். உடன் — என்னுடன். துன்று கானம் — மரங்கள் நெருங்கிய காடு. பார்க்கிலை யாம் — பார்க்கவில்லை போலும்.]

"அம்மா! நீ தர்மம் பார்த்துப் பேசவில்லையே! என்னைப் பிரிந்து துயரக் கடலில் மூழ்கிக் கிடக்கும் சக்ரவர்த்திக்கு அருகிலிருந்து தைரியம் சொல்லித் தேற்றுவதல்லவோ உன் கடமை, உன் தர்மம்? அப்படியிருக்க, நீ என்னுடன் காட்டுக்கு வரத் துணியலாமோ?" என்று ராமன் சொல்லுகிறான்.

ராஜ்யத்தை ஆளும் பொறுப்பைப் பரதன் ஏற்றுக் கொண்டதும், தந்தை ராஜ்யத் தொடர்பை எல்லாம் விட்டு விட்டுத் தவம் செய்வதில் ஈடுபடுவாரல்லவா? அப்போது அந்த அருமையான நோன்புகளையெல்லாம் உடனிருந்து ஸஹதர்மிணியான கோசலையும் செய்ய வேண்டுமாம். அப்படியிருக்க "உனக்கு ஏன் இந்தத் திகைப்பு?" என்று கேட்கிறான்:



"சித்தம் நீ திகைக்
கின்ற(து) என்? தேவ
[ரும்
ஒத்த மாதவம்
செய்(து) உயர்ந் தார்
[அன்றே!
எத்தனைக்குள
ஆண்டுகள்? ஈண்(டு)
[அவை
பத்தும் நாலும்
பகல் அல்ல வோ?"
[என்றான்.

[என் — என்ன. மாதவம் — பெருந்தவம். உயர்ந்தா

ரன்றே — உயர்ந்த பதவியை அடைந்திருக்கிறார்கள். எத்தனைக்குள ஆண்டுகள் — அப்படி யென்ன ஆண்டுகள் அவ்வளவு [அதிகமா? பத்தும் நாலும் பகல் அல்லவோ — எல்லாம் பதினாலு நாள் போலத்தானே ]

தேவர்களும் தவஞ் செய்துதான் தங்கள் பதவியை அடைந்திருக்கிறார்களாம். ஆகவே, "என்னைப் போன்றவர்களுக்குத் தவத்தினால் வரக்கூடிய பயன் இன்னதென்று சொல்லவா வேண்டும்?" என்பது குறிப்பு.

## இருவரும் பிரிதல்

வனவாஸம் செய்யும் பதினாலு ஆண்டுகளும் பதினாலு நாட்களாகப் பறந்து போம் என்றெல்லாம் சொல்லித் தாயைச் சமாதானப்படுத்துகிறான் ராமன். ஆனால், தாயின் துயரம் சிறிதும் குறையவில்லை. ராமன் நாட்டை விட்டுப் போய்விடுவான் என்பது இப்போது உறுதியாகி விட்டது. பரதன் சக்ரவர்த்தியாகட்டும். கோசலைக்குச் சந்தோஷந்தான். ஆனால் எப்படியாவது ராமனைக் காட்டுக்குப் போகாதபடி தடுத்துவிடவேண்டும். "சக்ரவர்த்தி காலில் விழுந்து நான் இந்த வனவாஸத்தை எப்படியாவது தடுத்துவிடுவேன்!" என்று கோசலை தசரதர் இருக்குமிடத்திற்குப் போகிறாள்.

தாயைத் தன்னால் தேற்ற முடியவில்லை யென்று கண்டுகொண்ட ராமனோ, சுமித்திரையிடம் போய்ச் செய்தி தெரிவித்தால் அந்தச் சிற்றன்னையே இவளையும் தேற்றக் கூடியவள் என்று கருதி அவள் மாளிகைக்குச் செல்லுகிறாள்.